# வெள்ளிமலை

இதழ் - 09 சித்திரை 2010 50/=

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
19 MAY 2010
நூலகம்






"தமிழ்ப்பிரியா"
ஏழாலை.

Anchor JEEVAN MEDICAL 1 - 3 years

ஜீவன் மருந்தகம்

Pediapro™

Specially formulated for the nutritional needs of 1-3 year olds

சகல விதமான ஆங்கில மருந்து வகைகள்
கால்நடைகளுக்கான மருந்து வகைகள்
மற்றும் இனிப்பு, பிஸ்கட் வகைகள்
பெற்றுக்கொள்ளலாம்.




இல. 52, Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

No. 52, Dr. Subramaniyam Road,
Chunnakam.



# வெள்ளிமலை

வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை

மலை : 03 சித்திரை 2010 வெள்ளி : 09

இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்
- பாவேந்தர் பாரதிதாசன் -

வலிகாமம் தெற்கு பிரதேச
வாசகர் வட்ட வெளியீடு

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன்
திருமதி இ. கருணாநிதி

ஆசிரியர் குழு
திரு. அ. தற்பரானந்தன்
திரு. ஐ. இராமசாமி
திரு. சு. ஸ்ரீகுமரன்
திரு. ப. சிவானந்தசர்மா
திரு. சி. றமேஷ்
திரு. கு. றஜீபன்
செல்வி. ஸ்ரீ. ஸ்ரீரங்கநாயகி

தொடர்புகளுக்கு
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு
கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகளாவர்.

## மலைமீதிலே

பொருளடக்கம் 01
எண்ணச்சாரல் 02
சிறந்த புத்தகம் சிறந்த நண்பன் - ம. க. வீரன் 03
விழிகளில் எழுதும் கவிதை - கு. றஜீபன் 06
மக்கள் வங்கி - க. இராஜமனோகரன் 07
நூல் போற்றுதும் - செ. றவீந்த் 11
நகர உருவாக்கத்தில் சுன்னாகம் நகரம் - சி. தி. செந்தூரன் 12
கவிதை - வலிதெற்கு நகரசபை தோன்றவே - ப. மகேந்திரதாசன் 15
சிறுகதை - மனமாற்றம் - M. இந்திராணி 16
பிரதேச சந்தைகள் அன்றும் இன்றும் - உடுவில் - கலைத்தாசன் 22
மல்லாகம் முதலியம்மன் - கு. கோபிராஜ் 23
தமிழ் இலக்கிய வரலாறு - ம. பா. மகாலிங்கசிவம், ம. பா. பாலமுரளி 27
ஈழத்து கதகளி கலைஞர் வேல் ஆனந்தன் - உ. உமாமகேஸ்வரி 35
நனவிடை தோய்தல் - ச. திருச்செல்வம் 42
கவிதை தெளிவுறு நல்லறிவு - ச. சுந்தரசீலன் 44
நற்பிரஜைகளை உருவாக்குவதில் நூலகத்தின் வகிபாகம் - செ. சங்கீர்த்தனா 45
கவிதை - உள்ளூராட்சியின் மாட்சி - க. சௌந்தரராஜன் 48

## எண்ணச்சாரல்

### *வாழ்க்கையின் வசந்தம்*


போரின் தாக்கத்தால் சின்னாபின்னமாகிப் போன தேசத்தின் வடபாகத்துக்கு நன்மையளிப்பதனை நோக்காகக் கொண்டு துரித அபிவிருத்திச் செயற்பாடுகள் வடக்கின் வசந்தம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் வாழ்வியலுடன் தொடர்புபட்ட அனைத்துத் துறைகளிலும் தீவிர கரிசனை காட்டப்பட்டு தேவைகள் இனங்காணப்பட்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதன் ஊடாக பல்வேறு முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன. துரித அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் கிடைப்பதனை உறுதிப்படுத்தி மக்களின் பங்கேற்புடன் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

தனது வாழிடத்துடன், தனது பிரதேசத்திதுடன், தனது தேசத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு ஒவ்வொரு குடிமகனும் செயற்படும்போது தேசத்தின் உயர்ச்சியானது தானே உருவாகும். விரக்தியும் பொறுப்பும் கொண்டு தம்மை ஒடுக்கிக் கொள்வதன் ஊடாக அவரவர் தாமே பின்னடைவுக்குள்ளாகி ஒரங்கட்டப்படுவார்கள். "நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்பர். தனக்குக் கிடைத்த வாழ்க்கையை எத்தகைய சூழ்நிலைகளுக்கும் இசைவாக்கி, ஏற்றமிறக்கம் போன்ற அனைத்துத் தருணங்களிலும் தன்னை மீளமைத்துக் கொண்டு வாழ்வதே புத்திசாலித்தனமாகும்.

கிடைக்கும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும உள் நின்றொளிரும் உணர்வுக்கு ஏற்றபடி செயற்படுதல் நன்று பயனுடைய வாழ்க்கையை தனக்காக மட்டுமின்றி யாவருக்காகவும் வாழ்வதே கிடைத்துள்ள இனிதான வாழ்க்கைக்கு வசந்தமாகும்.



# சிறந்த புத்தகம் ஒரு சிறந்த நண்பர்



நவீன மயப்படுத்தப்பட்ட தகவல்கள் நூற்றாண்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பொதுவாக தகவல்களையும், செய்திகளையும் இன்று நாம் கணனி மயப்படுத்தப்பட்ட இணையத் தளங்களுடாகப் பெற்றாலும், அதிகமான வற்றை நாம் நூல்கள் மூலமாக இன்றும் பெறக்கூடியதாயிருக்கின்றது. இத்தகவல்களையும், செய்திகளையும் நாம் வாசித்து அறிந்து கொள்வதன் மூலம் நம் மொழித்திறனையும், அறிவையும் விருத்தி செய்து கொள்ள முடிகின்றது. "வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான்" என்று பிரான்ஸிஸ் பேகன் என்ற அறிஞர் கூறியது போன்று வாசிப்புப் பழக்கம் ஒரு மனிதனைப் பூரணத்துவமுள்ளவனாக மாற்றுகின்றது. புத்தகங்கள் நாம் பழகும் நண்பர்களை விட மேலானது. ஒரு சில நண்பர்கள் ஏதும் எதிர்பார்ப்பை நினைத்தே நண்பராகிறார்கள். ஒரு சிலர் சில காலம் மட்டும் நண்பர்களாக இருப்பார்கள். ஆனால் புத்தகங்களோ கல்வியையும், அறிவையும் வளர்க்கும் ஒரு சிறந்த சாதனமாகத் திகழ்வதுடன் எம்முடன் அது என்றும் அழியாமல் எம் நினைவில் பதிந்திருக்கக்கூடியது. எம் அறிவுப் பசியைத் தீர்க்கும் ஒரு சாதனம் புத்தகங்களேயாகும். ஒருவரின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கும் நூல்களே அடிப்படையாக உள்ளன. சாதாரண மனிதர் கூட இன்று புத்தகங்களை வாசித்ததன் மூலம் மனித சமுதாயத்தின் முன்னணியில் நிற்பதை நாம் காண முடிகின்றது.

ம.க. ஸ்ரீதரன்.



ஒரு தனிமனிதனின் அறிவு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முதற் காரணியாய் அமைவது ஒரு நல்ல புத்தகமே. புத்தகம் என்றவுடன் நாம் கண்ட கண்ட புத்தகங்களை வாசித்து அழிவுப்பாதையில் செல்லாமல் சிறந்த புத்தகங்களை வாசித்தால் அது வாழ்நாள் முழுவதும் எமக்கு சிறந்த நண்பனாகவும், வழி காட்டியாகவும்

இருக்கும். புத்தகங்களை வாசித்தல் ஒரு பொழுது போக்கு மட்டுமில்லாமல் அறிவையும், ஆற்றலையும், சிந்தனாசக்தியையும் தருகிறது. நாம் எமது ஓய்வு நேரங்களை வீண் விரயஞ் செய்யாமல் புத்தகங்களை வாசிப்பதற்குப் பயன்படுத்தலாம். அநேகர் தாங்கள் பிரயாணஞ் செய்யும் பொழுது புத்தகங்கள் வாசிப்பதையே பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். மகாத்மாகாந்தி, சுவாமி விவேகானந்தர் போன்றோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் இப்பழக்கத்தையே கடைப்பிடித்துள்ளார்கள்.

காரியாலயங்களில் ஓய்வு நேரமுள்ளவர்கள் வீண் அரட்டை அடிக்காமல் புத்தகம் வாசிப்பதைப் பழக்கமாகக் கொள்ளலாம். மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை நல்ல அறிவு சார்ந்த நூல்களை வாசிப்பதன் மூலம், தங்களது அறிவுக் களஞ்சியத்தைப் பெருக்கலாம். பொதுவாக தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து இருப்பவர்களில் பெரும்பாலோர் புத்தகங்கள் வாசிப்பதில் நாட்டம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். பாடசாலைப் பருவத்திலேயே நூல்களைப் படிக்க வேண்டுமென்ற ஆவலை மாணவர்களுக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும், நூலகர்களும் தூண்ட வேண்டும். எவ்வளவு நேரம் வாசித்தோம் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் வாசித்ததில் எவ்வளவற்றை நாம் புரிந்து கொண்டோம் என்பதே முக்கியம். வாசித்தல் ஒரு தனி மனிதனின் ஆளுமையை (Personality) செப்பனிடும். நாம் மற்றவர்களுக்குத் திருமணப்பரிசாகவோ, பிறந்த நாள் பரிசாகவோ நல்ல புத்தகங்களைக் கொடுக்கலாம். அவ்வாறு செய்வதால் நாம் அவர்களின் வாசிப்பை ஊக்கப்படுத்த முடிகின்றது.

வாசிப்புப் பழக்கத்தை கைக்கொள்பவர்களுக்கு என்றும் வாழ்க்கையில் வெறுப்புத் தன்மை ஏற்படாது. அரைகுறை வாசிப்பு மிகவும் ஆபத்தானது. புத்தகங்களில் அநேக ரகங்கள் உண்டு. சில புத்தகங்கள் வாசிக்க, வாசிக்க மீண்டும் வாசிக்க வேண்டுமென ஆர்வத்தைத் தூண்டக்கூடியவை. சில புத்தகங்கள் என்றுமே நிரந்தரமான அழிவற்ற பெறுமதி வாய்ந்ததாகவும் படிக்கச் சுவையானதாகவும் இருப்பவை. அவற்றுள் பகவத்கீதை இராமாயணம், தம்மபத, திருக்குறள் என்பன சிலவாகும். மற்றும் காந்திஜி, நேருஜி, ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, பாரதி போன்றோரின் புத்தகங்களை எத்தனை தரம் ஆனாலும் வாசிக்க வேண்டும் போல் இருப்பவை. இதன் மூலம் நாம் புத்தகங்களை எமது நண்பர்களாக்க முடிகின்றது. புத்தகங்கள் ஒருவனை புத்திசாதுரியமுள்ளவனாகவும், நல்லவனாகவும் மாற்றக் கூடிய வல்லமை



படைத்தன. எமது வாழ்நாள் மிகவும் குறுகியதாகும். ஆதலால், நாம் எம்மால் வாசிக்கக்கூடிய சிறந்த புத்தகங்களை வாசித்து பயன்படுத்துவது மட்டுமல்ல, எமது சமூகத்தையும் சீர்திருத்த முடிகின்றது.

முக்கியமாக எமது பிரதேசத்திலுள்ள சுன்னாகம் பொது நூலகம் ஒரு அறிவுக் களஞ்சியம் எனக் கூறலாம். பிரதேச சபை செயலாளரினதும், நூலகரினதும் செயற்பாட்டினால் அங்கே சிறுவர்கள், இளைஞர்கள், மாணவர்கள், முதியோர்கள் எனப் பல தரப்பட்டோருக்கும் ஏற்ற நூல்கள், சஞ்சிகைகள், காலாண்டிதழ்கள், பருவஇதழ்கள், ஆங்கில இலக்கண, இலக்கிய நூல்கள், பத்திரிகைகள், கலைக்களஞ்சியங்கள் போன்றவை பெருமளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. நூலகத்தில் பணிபுரியும் பிரதமநூலகர், நூலகர்கள், உதவியாளர்கள் எப்பொழுதும் வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடமை உணர்வுடன் இருக்கின்றனர். எனவே இவ்வரிய வாய்ப்பினை அனைத்து வாசகர்களும் தங்களுக்கேற்ற வழியில் பயன்படுத்துவது அவர்களது அறிவு வளர்ச்சியை விருத்தி செய்வது மட்டுமன்றி எமது பிரதேச வளர்ச்சிக்கும் ஒரு உந்து சக்தியாக அமையுமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ■

## புத்தகக் காதலி



புதையல் போன்ற பெறுமதியாய்
பூத்திட்ட புதுமை தான் புத்தகம்
கதிருக்குள் ஒழிந்த நெல்மணியாய்
கண்ணுள் விளைந்த கருமணியாய்
அழகு எளிமை வர்ணமென
அருமையுருவில் பலவிதமாய்
பழமை புதுமை வகைப்பட்டு
பத்திரிகையின் ஏகபுதல்வி – என்
புத்தகக் காதலி
அஞ்ஞான இருளகற்றும்
வியனுலகத்தைப் புட்டு வைக்கும் விநோத தோழியவள்!
அகம் சூழும் அகந்தையகற்றி
ஒளி சேர என்னை உலகினில்
செவ்வானத்துச் சிவந்த சூரியன் போலாக்கி விட்ட
சிநேகிதமானவளே! என் சிதை வரை
சிறகடிக்கும் பெரு ஓவியமானவளே!
பொற்குவை சுமந்து வரும் புத்தகம்
வாழ வைக்குமொரு வரப்பிரசாதமே!

செ. ரவீசாந்
குப்பிளான்

# விழிகளில் எழுதும் கவிதை........

குு. றஜீபன்

சங்கீதம்
என் பல்லவிகளை
திருடிக்கொண்டது

என்
இதயமென்னும்
கருங்கல்லில்
இலக்கியச்சிற்பம்
வடித்தவளே!

காதலுக்கு
முன்னுரையான
விழிகள்
பல
முத்துக்களையல்லவா
கோர்த்திருக்கிறது.

வார்த்தைகளற்ற
கவிதைகளால்
இதயம்
கனத்திருக்கிறது.

அவள்
விழிகளில் எழுதும்
கவிதைகள்
இன்னமும்
அசை பிரிக்கமுடியாத
மரபுகள்
ஆம்! அவை!
மரபுக்கவிதைகள்.

நயனங்கள் சொல்லும்
மொழிகளில்
பல
சொப்பனங்கள் பிறக்கின்றன.

அவள்
நாணிவைக்கும்
அடியாய்
பூக்கும் விழிகள்
மெல்ல
தேன் சிந்தின.
ஓ!
என்னை
பார்க்கிறாள்.

அவள் பார்வையில்
எத்தனை இன்பம்
தொட்டாலே கசங்கிவிடும்
அந்தப் பார்வை
இப்போது
பட்டாலே இனிக்கிறதே!

சுகந்தமான பார்வையில்
இன்னும்
மகரந்தங்கள்
தூவட்டுமென்று
அவளை
பார்த்தபோது ......
நேரிழையாள்
நிலம் நோக்கினாள்
ஆகா.....!
இது ஒன்று போதுமே!

இளைய பெண்மை
இனிக்கிறதே!

பெண்மை!
இங்குதான் பேசுகிறது.
கண்ணியம்!
இங்குதான்
காட்சியாகிறது.

அவள்
மரபெனும் இளமைகள்
தலைசாயும்போது
தமிழே!.
தழைக்கிறது.
நாணித் தலைசாயும்
இமைகள்
பெண்மைக்குள்
வழுக்கி விழுகிறது.

அவள்
நிலம் நோக்கி
என் நெஞ்சில்
நீர் வார்க்கிறாள்.

அது நீரல்ல
தீர்த்தம்
காய்ந்துகிடந்த
நிலம் பெற்ற
தீர்த்த மழை.

இனி!
முளைவிடும்
காதல் ரோஜாக்கள்.

குறள் "நோக்கினாள் நோக்கி..."



# வலிகாமம் தெற்கு பிரதேச மக்களுக்கு மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் அபிவிருத்திச் சேவைகள்

மக்கள் வங்கியானது 1961ம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்பு கூட்டுறவு மாகாண வங்கிகளாக ஆரம்பிக்கப்பட்ட வங்கிகள் இம் மக்கள் வங்கியுடன் இணைந்து செயற்படத் தொடங்கின. இதற்கு சான்றாக மக்கள் வங்கி பிரதான வீதி வங்கிக் கிளையானது சொந்தக் கட்டிடத்தில் 1954ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி சேர். ஜோன் கொத்தலாவலவினால் ஆரம்பிக்கப்பட்டது. முன்பு ஆரம்பிக்கப்பட்ட வங்கிகள் பெரிய அளவிலான கடன்களை பெரிய முதலாளி வர்க்கத்திற்கு வழங்கி வந்தன. இதனால் சாதாரண மக்கள் வங்கிச் செயற்பாடுகளில் பங்குபற்றாது ஒதுக்கியிருந்தனர். இச்சாதாரண மக்களை வங்கி செயற்பாட்டில் ஈடுபடுத்தும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்த மக்கள் வங்கியில் அன்று சாதாரணமாக ஒரு கணக்கை ஆரம்பிப்பதனால் 5/= வுடன் கணக்கை ஆரம்பிக்க முடியும். நகை அடகுச் சேவையை முதலில் அறிமுகம் செய்து வைத்த பெருமை மக்கள் வங்கியையே சாரும். கிராம மட்டத்தில் உள்ள மக்களை வங்கி பழக்கத்தில் ஈடுபடுத்துவதற்காக கிராமிய வங்கிகளினூடாக கடன்களை வழங்கியும் அடகுச் சேவையை நடாத்தியும் வந்தன. 1964ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிராமிய வங்கிகள் கிராமிய பொருளாதார விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். ஆரம்ப காலம் தொடக்கம் 1970 வரை கிராமிய வங்கிகளின் விரிவாக்கம் மெதுவாகவே காணப்பட்டது. 1971ம் ஆண்டிற்குப் பின்பு கூட்டுறவுத் துறை மறுசீரமைப்பின் விளைவாக கிராமிய வங்கியென அழைக்கப்பட்ட வங்கி கூட்டுறவு கிராமிய வங்கியென பெயர் மாற்றப்பெற்று நகர்ப்புற மக்களுக்கு சேவை வழங்கியதுடன் வங்கிச் சேவையை கிராமிய மக்களுக்கு விஸ்தரித்தல், கிராமிய மக்களின் நிதி தேவையைப் பூரணமாக நிறைவேற்றுவது போன்ற சேவைகளைச் செய்து வந்தன. தற்போது கூட்டுறவு நகர், சிறிய கூட்டுறவு நகர் (Co - op City) வியாபாரத்தை கிராம மட்டத்திற்கு விஸ்தரித்துள்ளனர்.



சு. இராசமனோகரன்,
பிரதி முகாமையாளர்,
மக்கள் வங்கி,
சுன்னாகம்.

மக்கள் வங்கியானது மக்கள் மனமறிந்த வங்கியென்றும், மக்களின், நாடித்துடிப்பறிந்த வங்கியெனவும் சாதாரண மக்களாலும் பேசப்படும் வார்த்தையானாலும், ஆரம்ப காலத்தில் மக்கள் வங்கியின் விளம்பரங்கள், கிராம

கவர்ந்தவையாக இருந்ததும் ஒரு காரணமாகும்.வானொலி நாடகமான "தணியாத தாகம்" சில்லையூர் செல்வராசன், கமலினி செல்வராசன் என்பவர்களின் நடிப்பாற்றலினால் பிரசித்தி பெற்றன. "அத்தானே அத்தானே எந்தன் ஆசை அத்தானே மக்கள் வங்கி என்தோழன் துணைபுரிவான் கண்ணே" என்ற பாடல் மக்கள் மனதைக் கவர்ந்தது. சாதாரண மக்களும் இவ்வங்கியுடன் நெருங்கிய உறவை வைத்து, இது எங்கள் வங்கி என உரிமையுடன் கூறுவார்கள்.

வலிகாமம் தெற்குப் பிரதேச மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள் ஆவார்கள். இப்பிரதேசத்தில் கூடுதலாக செம்மண் பிரதேசமான புன்னாலைக் கட்டுவன், ஈவினை, குப்பிளான், ஏழாலை, இணுவில் போன்ற இடங்களில் மரவள்ளி, உருளைக்கிழங்கு, கருணை, இராசவள்ளி போன்ற பயிர்களும் கந்தரோடை, மாகியப்பிட்டி, உடுவில், சங்குவேலி போன்ற இடங்களில் நெற்செய்கையும், இணுவில், ஊரெழு, உரும்பிராய் ஆகிய இடங்களில் திராட்சை செய்கையும், வாழையும் அதிக பலன் தரக் கூடிய பயிர்களாகும். இப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் தங்கள் பொருட்களின் விற்பனை செய்பவதற்கு மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகள் மிகவும் வசதியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. சுன்னாகம் சந்தை போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து பிரபலம் அடைந்துள்ளது என்பதற்கு "சந்தைக் கட்டிடமும் கிட்டங்கி வியாபார முறையும்" இன்றும் சான்றாக உள்ளது. தென்பகுதி வியாபாரிகள் மரக்கறி, வாழைக்குலை, பனங்கட்டி, புழுக்கொடியல், சாமி, குரக்கன், இராசவள்ளிக் கிழங்கு இவற்றை இங்கு வந்து கொள்வனவு செய்து தென்பகுதி மக்களுக்கு வழங்குகின்றனர். மக்கள் வங்கி சுன்னாகம் கிளை அமைந்துள்ள இடமானது நான்கு சந்திகளும் சந்திக்கும் இடத்திற்கு அருகாமையில் இருப்பதனால் மக்கள் எந்தநேரமும் இவ்வங்கிக்கு வந்து போவதற்கான போக்குவரத்து வசதிகள் அமைந்துள்ளன. பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், அளவெட்டி, சங்கானை போன்ற இடங்களில் இருந்து காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் போக்குவரத்து சேவையும் சிற்றூர்திகளின் சேவையும் நடைபெறுகின்றன. கிராமிய மக்கள் தமது அன்றாட தேவைகளான மரக்கறி, மீன் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சுன்னாகம் சந்தைக்கு வரும்பொழுது வங்கித் தேவைகளையும் நிறைவுசெய்து கொள்கிறார்கள். இந்த அமைவிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட வங்கியானது தற்போதய இடத்திலிருந்து கடந்த 30 வருடங்களாகச் சேவையாற்றிவருகின்றது. எத்தனையோ வங்கிகள் அவர்களுக்கு கிட்டிய தூரத்தில் இருந்தும் சுன்னாகம் மக்கள் வங்கியை நாடுகிறார்கள் என்றால் இவ்வங்கி அன்று தொட்டு இன்று வரை செய்து வரும் அர்ப்பணிப்புடனான சேவையே காரணமாகும்.

இம்மக்களுக்கு வங்கியின் தற்போதய சேவைகளாவன:-

01. **இசுரு உதான கணக்கு:** குழந்தை பிறந்த திகதியிலிருந்து 5 வயது வரையும் இக்கணக்கை திறக்கலாம். வங்கி ஆரம்ப வைப்பாக 100/= அக்கணக்கில் வைப்பிலிடும். 31.12.2009 முன்பு 5000/= வைப்பில் இடுபவர்களுக்கு வங்கியால் 1000/= வைப்பிலிடப்படும். இத்துடன் தண்ணீர்ப்போத்தல், பாடசாலைப் பை போன்றவை பரிசில்களாக கொடுக்கப்படும்.



02. **சிசு உதான கணக்கு:** இக்கணக்கை 6 வயதில் இருந்து 18 வயது வரையும் திறக்கலாம். ஆரம்ப வைப்பாக 100/= வுடன் கணக்குத் திறக்க முடியும். இதற்கு 1000/= வரையிலான வைப்பிற்கு தொப்பியும் 2500/= வரையில் தண்ணீர் போத்தலும் 5000/= வரையில் பாடசாலை பையும் 10,000/= விற்கு கைமணிக்கூடும் 25,000/=வரை ஆங்கில அகராதியும் 50,000/= ற்கு கணிப்பானும் வழங்கப்படும். வங்கியானது பாடசாலை மட்டத்தில் மாணவர்களை சேமிப்பில் ஊக்கப்படுத்துமுகமாக "சிசு உதான" அலகு திறந்து அதன் மூலம் சேமிப்பில் ஈடுபட வைக்கின்றது. இவ்வைப்புக்களில் கூடிய வைப்புக்களைத் திரட்டிய பாடசாலைகளுக்கு வங்கியின் பிராந்திய மட்டத்தில் பாடசாலைகளுக்கு அபிவிருத்திக்காக பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கி வருகின்றன.

03. **Yes கணக்கு:** 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 500/= வுடன் இக்கணக்கைத் திறக்க முடியும். இக்கணக்குடையோருக்குச் சிறிய கடன்கள் கொடுத்து சிறிய கைத்தொழில் செய்பவர்கள் வசதி வாய்ப்புச் செய்து கொடுக்கப்படும்.

04. **வனிதா வாசனா:** மகளிருக்கான இக்கணக்கை 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 500/= வுடன் கணக்கைத் திறக்க முடியும். சிறுகைத்தொழில் கடன்கள் வழங்கப்படும்.

05. **அறுவடைக் கணக்கு:** இக்கணக்கை 1000/=வுடன் ஆரம்பிக்க முடியும் 1000 /= க்கு மேல் 1% போனஸ் வட்டி கொடுக்கப்படும்.

06. **பரிணத கணக்கு:** இக்கணக்கை 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் திறக்க முடியும். வழமையாகக் கொடுக்கப்படும் வட்டி வீதத்தைவிட 1% கூடுதலான வட்டி கொடுக்கப்படும்.

07. **தன்னியக்க பணப்பரிமாற்றம்:** ATM: வங்கியின் முன்றிலில் பொருந்தியுள்ள இப்பரிமாற்ற இயந்திரம் மூலம் ஒருவர் ஒருநாளைக்கு 40,000/= வரையும் பெற்றுக்கொள்ள முடியும். இச் சேவையானது 24 மணி நேரமும் எதுவித கட்டணமுமின்றி நடைபெறுகின்றது.

08. **Western Union Money Transfer:** வெளிநாட்டில் இருந்து ஒருவர் பணத்தை உடனடியாகப் பெற வேண்டுமானால், அதற்கு கொடுக்கப்படும் இரகசிய இலக்கத்தையும் அனுப்பியவர் பெயரும் எடுப்பவரின் அடையாள இலக்கம் போன்றவற்றைக் கொடுத்து உடனடியாக வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற முடியும்.

09. **விம்பத் தீர்வை (Image Clearing):** வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கும் காசோலைகளை உடனுக்குடன் தீர்வையாக்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

10. **வங்கிகளுக்கிடையிலான பணப்பரிமாற்றம் (IBT):** இலங்கையில் உள்ள எந்த ஒரு மக்கள் வங்கிக்கும் உடனடியாகப் பணத்தை அனுப்பி வைக்கும்

இம்முறையானது பெரும்பாலான மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சகல தொலைபேசிக் கட்டளைகள், மின்சாரக் கட்டளைகளைச் செலுத்தும் வசதி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனக் காசோலைகளை சேகரித்து ஊழசிழசயவந கிளை தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்புதல்.

**11. கடன் திட்டங்கள்:-** வீட்டுக்கடன், வீடு கட்டுதல், வீடு திருத்துதல், விவசாயக் கடன், சிறுகைத்தொழில் கடன், கோழிவளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு போன்றவற்றிற்கான வங்கிக்கடன் வழங்கல், அடகுக் கடன் சேவை, வடக்கின் எழுச்சி, சிறப்பு அபிவிருத்தி கொடுகடன் திட்டம். இக்கடன் பெறுபவர்கள் இலங்கைப் பிரசையாகவும், வடமாகாண குடியிருப்பாளராகவும் 18 -55 வயதிற்குமேற்பட்டவராகவும், ஏதாவது நிதி நிறுவனங்களில் கடன் எடுத்து மீள செலுத்த தவறியவர் அல்லாதவராகவும் இருக்க வேண்டும். கடன் தொகையாக 200,000/= 12% வட்டி அறவிடப்படும். இதற்கு ஆகக்கூடிய கடன் தொகையாக 200,000/= 12% வட்டி அறவிடப்படும். மீளச்செலுத்தும் காலம் 5 வருடங்கள் ஆகும். கடனுக்கான பாதுகாப்பிற்கான 2 பிணையாளர் அல்லது அசையும், அசையாச் சொத்துக்கள் மீதான ஈடும் ஏற்றுக் கொள்ளப்படும். கடனானது நெல் உற்பத்தி, நெல்லுக்கான உரக்கொள்வனவு நெல் சந்தைப்படுத்தல், கால் நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, மீன்பிடிக் கைத்தொழில், மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு செய்கைக்கு வழங்கப்படுகின்றன.

இப்படியாகக் காலத்திற்குக் காலம் வாடிக்கையாளர் தேவையறிந்து அளப்பரிய சேவையை ஆற்றிவரும் மக்கள் வங்கி 48 ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டிருக்கின்றது. இவ்வருட இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கோப்பாய், புலோலி கல்வியங்காடு, நாவலர் வீதி போன்ற சேவை நிலையங்களை மக்கள் வங்கியின் தலைவர்.

பொது முகாமையாளர் உட்பட பல உயர்மட்டத்தவர்களால் திறந்து வைத்து கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி அடையச் செய்துள்ளனர். இப்போது கிளைகள், சேவை நிலையங்கள், அடகு நிலையங்கள் உட்பட 660 கிளைகள் உள்ளடங்கியதாக மக்கள் வங்கி சேவையாற்றி வருகின்றன.

**மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் எதிர்காலத்திட்டங்களாவன:-**

எமது வங்கிக்கு யாழ்ப்பாணத்தில் எந்த வங்கிக்கும் இல்லாத ஒரு அசையா சொத்து காங்கேசன் துறை வீதியில், தற்போது வங்கி அமைந்துள்ள இடத்திற்கு எதிர்புறமாக 50 யார் தூரத்தில் 10 பரப்பு காணி சொந்தமாக உள்ளது. இக்காணியில் வங்கிக் கிளையானது நவீன வசதிகளுடனும், தொழில்நுட்பத்துடனும் வாகன தரிப்பிடம் உட்பட அமைக்கப்பட்டு ஊழியர்களுக்கான பயிற்சி கல்லூரி, தங்குமிட வசதியும், அமைக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு சேவையாற்றுவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் தலைமைக் காரியாலயத்துடன் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இது மிக விரைவில் நடைபெறும் சாத்தியக் கூறுகள் இருப்பதையிட்டு நாம் மனமகிழ்வடைகின்றோம். ■



# நூல் போற்றுதும் நூலகம் போற்றுதும்

*கல்விக்கே கண்ணான*
*வல்லமை கொண்ட நூல்கள்*
*அள்ளித் தரும் நூலக வாரமதில்*
*பிள்ளைகள் பேணும் பெற்றோர்கள் போல்*
*பேணிக் காத்திடுவோம் நூலகங்களே!*
*நல்ல கருப் பொருளை*
*நயம்பட எமக்கு எடுத்துரைக்கும்*
*நல்ல நூல்கள் தம்மை நமக்கென்றின்றி*
*பிறர்க்கும் உதவும் படியாக*
*வெட்டுதல் கிழித்தல் போன்ற*
*வேண்டாச் செயல்களுக்கு உள்ளாக்காது*
*விரும்பியே படித்து – எமக்கு*
*வேண்டியளவு அறிவைத் தேக்கிடுவோம்*
*அள்ளிட முடியா அறிவு தரும்*
*சொல்லிட முடியாச் சுவையான நூல்களே*
*கனிதரும் தனிச் சுவை போல*
*கற்று நாமும் மெய்மறந்து*
*புதியதோர் பாதை வகுத்துப்*
*புறப்படுவோம் எழுந்துவாரீர்!*
*அறிவு வளர்க்கும் கலைக்கூடமான – நல்*
*ஆசானான நூல் நிலையத்தை*
*அனு தினமும் நாம் அடைந்து விட்டால் – எம்*
*அறிவுப் பசியைத் தீர்த்திடலாம்*
*பாமர மக்களுக்கோர் பல்கலைக்கழகமாம்*
*அறிவு பெருக்கும் அருமை நூலகத்தை*
*நாடித் தேடிப் பயின்றிடவே*
*நன்மைகள் பலவும் பெற்றிடலாம்*
*வாருங்கள் தோழர்களே! வருங்கால மொன்றிற்கு*
*வழி சமைப்போம் தோழர்களே!*

செ. ரவிசாந்
குப்பிளான்

# நகர உருவாக்கத்தில் சுன்னாகம் நகரம்

சி.தி. செந்தூரன்

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைபவைஅப்பிரதேசத்தில் உள்ள நகரங்களாகும். நகரம் என்பது சிறப்புப் பணியும் சமூக இயக்கமும் கொண்ட குடியிருப்புக்களது தொகுதியாகும். ஒப்பீட்டு ரீதியில் பல்வேறு நோக்கங்களை அல்லது கடமைகளைக் கருத்தில் கொண்டு குறித்த பகுதிக்குள் மக்கள் குவிவு அடைவதால் உருவான குடியிருப்புக்களே நகரக் குடியிருப்புக்கள் ஆகும். இவை பரப்பளவு (Size), தோற்றம் (Appearnce), செயற்பாடு (Function), கட்டமைப்பு (Structure) என்பவற்றில் வேறுபட்டுக் காணப்படும். இவ்வரையறைக்குள் சுன்னாகம் நகரத்தை ஆய்வு செய்வதும், நகரத் திட்டமிடலிற்கான எதிர்கால உத்திகளை வகுப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நகரக் குடியிருப்புக்கள் பற்றிய ஐ.நாவின் வரையறையானது 05 அம்சங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

1. நிர்வாகத் தன்மை (Administrative status)
2. குடித்தொகைப் பருமன் (Population size)
3. உள்ளூராட்சி அமுலாக்க அமைப்பு (Form of local government)
4. நகரப் பண்புகள் (Urban characteristics)
5. பொருளாதார செயற்பாட்டு பண்புகள் (Economic Activity characteristics)

என்பனவாகும்.

இன்றைய நிலையில் நகரத்திற்கான வரையறைகளானது விரிவு பரந்துபட்டதொரு விளக்கத்தையும் கொண்டுள்ளது. காரணம் இன்று நகர வரையறையில் சமூக பொருளாதார வளர்ச்சிகள் அதீத செல்வாக்கைச் செலுத்துகின்றன.

நகரக் குடியிருப்புக்களை பல வகைப்பாடுகளாக நோக்குவர். குறிப்பாக பட்டினம் (Town) நகரக் குவிவு (Urban Agglomeartion), நகரம் (City) மில்லியன் நகரம் (million cities) என்பனவாகும் பட்டினம் குடித்தொகைப் பருமனிலும் நகர உருவவியல் அமைப்பிலும் வளர்ச்சியை வேண்டி நிற்பதுடன் போட்டித்தன்மை கொண்ட வியாபார செயற்பாடும் காணப்படும். நிர்வாகத்தகுதி நிலை (Administrative Status) அடிப்படையிலும், குடித்தொகை அடிப்படையிலும் பட்டினமும் நகரமும் வேறுபடும். அத்தோடு பல்வேறு பட்ட பொருளாதாரச் செயற்பாடுகள் காணப்படும். பிரதேச நிர்வாக மையங்களின் வளர்ச்சியையும் இதில் அவதானிக்கலாம். மில்லியன் மற்றும் நகரக் குவிவுகள் சனத்தொகை, உட்கட்டுமானம், வர்த்தகம், பொழுது போக்கு, சேவை வசதிகளில் அதி உன்னத தன்மைகளின் வளர்ச்சியை அவதானிக்கலாம்.

சுன்னாகம் ஓர் பட்டினமாகவே கொள்ளப்படுகின்றது. இதில் பட்டினம் என்ற சொல்லின் பிரயோகம் வழக்கொழிந்த போதும் இதனை ஓர் சிறிய நகராக அல்லது



கிராம நகர பாங்குடையதாக கொள்ளலாம் எனக் கருதவேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் நான்கரை சதுரகிலோமீற்றர் பரப்பளவினையும் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளையும் - [சுன்னாக நகரம் வடக்கு (J/ 195), சுன்னாக நகரம் தெற்கு (J / 196), சுன்னாக நகரம் கிழக்கு (J / 197), சுன்னாக நகரம் மத்தி(J / 195) சுன்னாக நகரம் மேற்கு (J / 199] - யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியும், சங்கானை - பருத்தித்துறை வீதியும் சந்திக்கின்ற சந்தியினை மையப்பகுதியாகவும் கொண்டு வர்த்தக, கைத்தொழில் நிர்வாக சேவை மையங்களுடன் வளர்ச்சி அடைந்து வரும் விவசாயப்பின்புலம் கொண்ட ஓர் வரையறுக்கப்பட்ட பரப்பே சுன்னாகம் நகரமாகும்.

வடக்கே மல்லாகமும் வடகிழக்கே ஏழாலையும் கிழக்கே ஊரெழுக் குப்பிளான் பகுதியும், தென்கிழக்கே உரும்பிராயும் தெற்கே இணுவில் மருதனார்மடம் பகுதிகளும், தென் மேற்கே உடுவிலும் மேற்கே சண்டிலிப்பாய், சங்கானை என்பனவும் வடமேற்கே அளவெட்டி, மாகியப்பிட்டி என்பவற்றையும் எல்லையாக கொண்ட

**சுன்னாகம் நகரின் நிலப்பரப்பு - சனத்தொகை**

| கிராம சேவகர் பிரிவு | மொத்தப்பரப்பு | | நிலப்பரப்பு | | குடித்தொகை (2009) |
|---|---|---|---|---|---|
| | சதுரமீற்றர் | வீதம் | சதுரமீற்றர் | வீதம் | |
| சுன்னாகம் நகர் வடக்கு (J/195) | 1.00 | 3.01 | 0.01 | 0.09 | 1118 |
| சுன்னாகம் நகர் தெற்கு (J/196) | 0.50 | 1.50 | 0.60 | 5.66 | 2847 |
| சுன்னாகம் நகர் கிழக்கு (J/197) | 1.50 | 4.51 | 0.35 | 3.30 | 1571 |
| சுன்னாகம் நகர்மத்தி (J/198) | 0.50 | 1.50 | 0.01 | 0.09 | 1848 |
| சுன்னாகம் நகர் மேற்கு (J/199) | 1.00 | 3.01 | 0.40 | 3.77 | 1673 |

விவசாய பின்புலம் மிக்க பகுதியாக இது விளங்குகிறது.

மூலம்:- வலி தெற்கு பிரதேச செயலகம் புள்ளி விபரத் தரவுகள் - 2009

### நகரத்தோற்றமும் - வளர்ச்சியும்

சுன்னாகம் ஓர் சந்தை நகரமாகவே பார்க்கப்படுகின்றது. காங்கேசன்துறை -- யாழ்ப்பாணம் வீதியும் சங்கானை - பருத்தித்துறை வீதியும் இணையும் பகுதியில் சந்திக் குடியிருப்பாகவே இது தோற்றம் பெற்றது. தற்காலிக கொட்டகைகளிலும் மரநிழலிலும் ஓரிரு வர்த்தக நிலையங்களைக் கொண்டு இது இயங்கியது. ஒல்லாந்தர் காலத்தில் நிரந்தரமாக ஓர் கட்டிடம் அமைக்கப்பட்டு அதில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அக்கட்டிடமே இன்றும் சுன்னாகம் பழைய சந்தை கட்டிடம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

நிரந்தர கட்டிட அமைப்பால் சேவை நிலையங்கள் எண்ணிக்கையில் அதிகரிக்கத் தொடங்கின. ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட புகையிரத பாதை சுன்னாகம் நகரப் பரப்பினூடாக சென்றமையால் தரைப் போக்குவரத்தின்

இன்னொரு மையமாக சுன்னாகம் விளங்கவும் - வெளியூர் வர்த்தகர்கள் சுன்னாகம் சந்தையை பயன்படுத்தவும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் வர்த்தக ரீதியான ஓர் நேரடி மாற்றத்தைப் பெற்றுக் கொண்டது.

1931 இல் இப்பகுதி கிராம சபை அந்தஸ்தைப் பெற்று உடுவில் கிராம சபையின் கீழ் வந்தது. 1948 இல் சுன்னாகம் சந்தையினதும் ஏனைய சேவை நிலையங்களினதும் அதிகரித்த வருமானத்தால் பொருளாதார ரீதியில் உடுவில் கிராம சபை 2 வது இடத்தைப் பெற்றது. இவ்வருமான அதிகரிப்பு போக்குவரத்து, சுகாதார வசதிகளின் அதிகரிப்புக்கு உதவியது,

01. 01. 1964 இல் உடுவில் கிராம சபையிலிருந்து சுன்னாகம் பிரிந்து பட்டின சபை அந்தஸ்தை பெற்றது. இக்காலப் பகுதியில் சுன்னாகம் பட்டின சபை சுன்னாகம் சந்தையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது. 1970 இல் பல புதிய நிரந்தரக் கட்டிடங்களும் நவீன சந்தையும் அமைக்கப்பட்டதுடன் குழாய் நீர் வசதி, மின்சார வசதி என்பன செய்து கொடுக்கப்பட்டு நகர அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. 1960 இல் சுன்னாகத்தில் அமைக்கப்பட்ட மின்சார நிலையத்தால் இது மேலும் பிரபலமானது.

1981 இல் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை எனும் அமைப்பின் கீழ் இயங்கியது. 1987 இல் பிரதேச சபைகளது உருவாக்கத்தால் சுன்னாகம் பட்டின சபை பிரதேச சபையாக மாற்றப்பட்டது. 1990 இல் இடம்பெற்ற வலி வடக்கு மக்களது இடப் பெயர்வு இப்பிரதேசத்தை சன அடர்த்தி மிக்க பகுதியாகவும் குடியிருப்பு - கட்டுமான வளர்ச்சிக்கான காலமாகவும் மாற்றியது.

1971 இல் 14192 பேராகக் காணப்பட்ட குடித்தொகை 1981 இல் 16118 பேராக அதிகரித்து தொடர்ந்து வந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த செயற்பாடுகளால் 2001 இல் குடித்தொகை 8228 பேராகக் குறைவடைந்து இது 2006 இல் 9695 பேராகக் காணப்பட்டது. 2009ல் 9057 பேராகக் காணப்படுகின்றது. இப்பிரதேச குடிப்பரம்பல் விவசாய நடவடிக்கையிலும், வர்த்தக நடவடிக்கைகளிலுமே அதிகம் தங்கியுள்ளது. இந்த வகையில் வலி தெற்கில் வளர்ச்சி பெற வேண்டிய நகர்களில் சுன்னாகம் நகர் முக்கியம் பெறுகின்றது. ஆனாலும்,

1. குடித்தொகையின் குறைந்தளவு செல்வாக்கும்,
2. திட்டமிடப்படாத வளர்ச்சியும்
3. போக்குவரத்து வலைப்பின்னலின் குறைந்தளவு செல்வாக்கும்
4. இன்று வரை உரிய வகையில் பயன்படுத்தப்படாது காணப்படும் நிலங்களும்,
5. வளர்ச்சி பெறாத போக்குவரத்து முறைகளும்

இந் நகரை ஓர் இயக்கமுடைய நகராக மாற்றவில்லை என்பதே முடிவாகும். இந்நிலையில் இனிவரும் காலங்களில் இவ்வளர்ச்சி ஒழுங்கு படுத்தப்பட வேண்டியது மிகமிக அவசியமானது. ■



**பலித்திடுமா கனவு ஒன்று**

# வலிகாமம் தெற்கு நகரசபை தோன்றியே!

1) சுன்னாகம் பட்டின சபையுடனே கிராமச்
சபைகளாம் ஏழாலை உடுவில் என்பனவும்
ஒன்றாக இணைந்து வலிகாமம் தெற்குப்
பிரதேச சபையெனவே ஆண்டுகள் பலவாக
நன்றாகச் செயற்பட்டுச் சேவைகளை வழங்கி
நிர்வாக முகாமை முறைமைகளில் தேர்ந்து
முன்னேற்றம் கண்டுவரும் நிலையினிலே நிறைவுதரும்
முத்தான செய்தியொன்று மகிழ்வுதர வந்ததுவே!

2) முன்னர் இணைந்திருந்த அம் மூன்று சபைகளுமே
மலருமாம் "வலிகாமம் தெற்கு நகரசபை"
என்னும் பெயருடைய தாபனமாய்த் தரமுயர்த்தி
எம்மவரின் நீண்ட நாட் கோரிக்கை தனை ஏற்றுப்
பொன்னான எழுத்தினிலே பொறித்திடும் நிகழ்வாக
பாரிய இம் மாற்றமதை நடைமுறையில் கொண்டுவர
முன்னின்று உழைத்திடும் அனைவருக்கும் எங்களது
மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்தோமே.

3) வலிகாமம் தெற்கு நகர சபையென்னும்
வளம் பெருக்கு மாமணியை நாமுள்ளப்
பொலிவோடு நாளும் போற்றி எங்களது
பிரதேச மக்களது வாழ்வின் வளர்ச்சிக்கு
வலுவான திட்டமெலாம் வகுத்துச் செயற்படுத்தி
விவசாயம் தொழில்கள் கல்வி கலாச்சாரமென
நிலையான நலம்பெறவே நாமெல்லாம் அர்ப்பண
நினைவுடனே பங்களித்து வழங்கி ஒளிகாண்போம்

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்

# மன மாற்றம்

எம். இந்திராணி

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வெளியில் வந்த போது விஷ்ணுவின் மனதில் சலிப்பான ஓர் உணர்வே மேலோங்கி நின்றது. "சீ திரும்பவும் இந்த இடத்துக்கு வரவேண்டி வந்து விட்டதே" என்ற அருவருப்பான மனநிலையில் அவன் இருந்தபோதும், அவனது கண்கள் ஆர்வத்தோடு யாரையோ தேடின. அவனது தேடலுக்கு உரியவர்களான மனைவி மீராவும், மகன் விஸ்வாவும் விஷ்ணுவை அடையாளம் கண்டு கொண்டு அவனை நோக்கி வந்தனர்.

"இவர் தான் உன்ரை அப்பா" என்று விஷ்ணுவை மகனுக்கு அறிமுகம் செய்தவாறே அவனுக்கு அருகில் வந்தாள் மீரா, மகன் மூன்று மாதக் குழந்தையாய் இருந்தபோது விஷ்ணு மகனையும் மனைவியையும் பிரிந்து வெளிநாட்டுக்குப் போய்விட்டான். ஆயினும் மீரா விஷ்ணுவின் படத்தைக் காட்டி "இவர்தான் அப்பா" என்று குழந்தைக்குச் சொல்லிசொல்லி வந்ததால் அவனைப் பார்த்த உடனேயே ஆறு வருடங்கள் காணமலிருந்த போதும் அவனுடன் மகன் ஒட்டிக் கொண்டு விட்டான். மனைவியையயும் மகனையும் பார்த்தவுடன் விஷ்ணுவின் மனதில் சிறு மகிழ்ச்சி ஏற்பட்டிருந்த போதும், அவனது மனம் இங்கு ஓட்டிக்கொள்ள மறுத்தது. அவனுடைய மனதிலிருந்து ஊர்ப்பற்று, உறவுப்பற்று, நாட்டுப்பற்று என்று இப்படியான உணர்வுகள் எப்போதோ துடைத் தெறியப்பட்ட நிலையில் தான் அவன் இருந்தான். இப்போதைக்கு, மனைவி யையும் மகனையும் தான் இதுவரை இருந்த வெளிநாட்டுக்குக் கூட்டிக்கொண்டு செல்வதற்காகவே அவன் வந்திருக் கிறான். அதுவும் மிக விரைவாகக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விடவேண்டும் என்ற எண்ணமே அவனிடம் குடி கொண்டிருந்தது.

சிறு பையனாய் இருந்தபோது விஷ்ணு இப்படி இருக்கவில்லை. அப்போது அவனுக்கு தன் சொந்த ஊர்மீது, தன் பெற்றோர், இனசனங்கள் மீது, தன் வீட்டின் மீது, தான் வணங்கிய பிள்ளையார் மீது, தமது தோட்டம் துரவுகள் மீது அளவற்ற பற்றும், பாசமும், பக்தியும் இருந்தன. சிறு பராயத்தில் அவனது மனதிற்கு ஏற்பட்ட அதிர்வுகள் தான் பற்று வைத்திருந்த அத்தனை விஷயங்கள் மீதும் அசட்டையை ஏற்படுத்தின.

அவன் ஐந்தாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தவரை அம்மா அப்பா பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, ஆசையம்மா, சின்னம்மா என்று சுற்றத்தவர் சூழ மகிழ்ச்சியோடிருந்தான். ஒவ்வொரு உறவினர் வீட்டிற்கும் அடிக்கடி போவான்; கொண்டாடுவான்; அவர்களுக்கு உதவியும் செய்வான். காலையும், மாலையும் அப்பாவின் தோட்டத்துக்குப் போய் உதவி செய்து, நீர் பாய்ச்சும் போது வாய்க்காலில் நீர் சலசலத்து ஓடுவதைப் பார்த்து, ரசித்து, பயிர்கள் காற்றில் சாய்ந்து அசையும் போது தானும் தலையசைத்து, உயிருள்ள, உயிரில்லாத அத்தனையின் மீதும் பற்று வைத்து ஒன்றிப் போயிருந்தான். படிப்பிலும் அப்படித்தான், முழு அக்கறை கொண்டிருந்தான். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளி பெற்று சித்தியடையலாமென்ற முழு நம்பிக் கையும் ஆசையும் அவனுக்கிருந்தன. பெற்றோரும் அவனுடைய ஆசிரியரும் மாவட்டத்தில் முதல் மாணவனாய் வருவாய் என்று அவனைக் கனவில் மிதக்க வைத்தனர். அவனும் தான் டாக்டராய் அல்லது எஞ்சினியரராய் வரவேண்டும் என்று அப்போதே கற்பனைகள் செய்து கொண்டு அந்த ஆர்வத்தோடு இரவு பகலாய் படித்தான். ஆனால், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கு முதல்நாளே அந்த ஊரைவிட்டு அவர்கள் எல்லாரும் இடம் பெயரும் நிலை ஏற்பட்டது.



பரீட்சை எழுதமுடியாமல் போன ஏமாற்றம் விஷ்ணுவுக்கு மிகுந்த மனத்தளர்வைக் கொடுத்தது. அதன் பிறகு அவர்களால் தம் சொந்த வீட்டிற்கு நீண்ட காலமாய் வரமுடியவில்லை. அவ்ன் போய்த் தங்கியிருந்த இடத்திலும் நடைபெற்ற அசம்பாவிதங்களால் ஏற்பட்ட இழப்புக்கள், கண்ட கோரக்காட்சிகள், பயங்கரமான சத்தங்கள், அமைதியாக இருக்க முடியாமல் அங்கு மிங்குமாய் அலைந்து திரிந்த இடப்பெயர்வுகள், சந்தித்த அசௌகர்யங்கள், அகதி என்ற அவலநிலை- இவையெல்லாம் சேர்ந்து அவனை மிகவும் உடல், உளப்பாதிப்பு களுக்கு ஆளாக்கிவிட்டன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஒழுங்காகக் கல்வி கற்க முடியாமல் அதற்கு ஏற்பட்ட தடைகள் அவனை மிகவும் குழப்பி விட்டன.

தனது சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த பிறகு ஒரு சிறிய வீட்டில் இருபது பேரோடு சேர்ந்து விஷ்ணுவும் ஒருவனாக இருந்தான். அப்போது, மிகுந்த நெருக்கடிகள், வசதியீனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில், அவன் சொந்த ஊரில் சொந்த வீட்டில் அப்பா, அம்மா, அக்காவுடன் வசதியாக மகிழ்ச்சியாக இருந்ததை எண்ணிஎண்ணி ஏங்குவான், முற்றத்திலே றோஜாச் செடிகள் பூத்துக் குலுங்குவதைப் பார்த்து ரசிப்பான். அவற்றின் வாசனையை முகர்ந்து முகர்ந்து மகிழ்வான். ஆட்டுக்குட்டிகளைத் தூக்கி மடியில் கிடத்தி வருடிக் கொடுப்பான். அவற்றையெல்லாம் அநாதரவாக விட்டுவிட்டு வந்ததை எண்ணி எண்ணிக் கலங்குவான். இந்த அகதிவாழ்க்கை அவனை மிகவும் பாதித்தது. சத்தங்கள் கேட்டால் காதைப் பொத்திக்கொண்டு ஒடுங்கி, மறைந்து மேசைக்குக் கீழ் படுத்துவிடுவான்.

அந்த நேரத்தில் பலர் பாதுகாப்புக்கருதி கொழும்புக்குப் போய்க் குடியேறினர். விஷ்ணுவின் மீது பரிதாபப்பட்டு, "இவனையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போங்கோ" என்று பெற்றோரிடம் சிலர் ஆலோசனை கூறினார். அப்படித் போய் அங்கேயிருக்கக் கூடிய வசதி அவர்களுக்கில்லை. ஆயினும் கொழும்பில் இருக்கும் உறவினர் வீட்டில் விட்டு அவனைப் படிக்க விடலாம்" என்ற நினைப்போடு விஷ்ணுவைக் கூட்டிக் கொண்டு போனார் தந்தை. நல்ல வேளையாக அவருடைய ஒன்று விட்ட சகோதரரான சிவலிங்கம் தமது வீட்டில் விஷ்ணுவைத் தங்க வைத்து படிக்க வைக்கிறேன் என்று அவனைப் பொறுப்பேற்றார். சிவலிங்கம் பெரியப்பாவின் அரவரணப்பு விஷ்ணுவுக்கு நிம்மதியைத் தந்தது. ஆயினும் இடைக்கிடை அம்மா அப்பா, ஆட்டுக்குட்டி, றோஜாச்செடி, பிள்ளையார் கோயில், தோட்டம் இவைகளை நினைத்து ஏக்கம் கொள்வான். அந்த ஏக்கம் சலிப்பாக மாறி "சீச்சி அந்தப்பழம் புளிக்கும்" என்பது போல அவற்றிலே ஒரு விருப்பமின்மை ஏற்பட்டு அது வெறுப்பாக மாறி அவைகளிலே பற்றோ பாசமோ இல்லாதவனாய் அவற்றை யெல்லாம் நாளடைவில் மறந்து போனான். சிவலிங்கம் பெரியப்பா காட்டிய அன்பும் ஆதரவும் அவனை ஆசுவாசப்படுத்தி அமைதிபெறச் செய்தபோதும் முழுமை யான உற்சாகமும் சந்தோஷமும் அவனக்கு ஏற்படவில்லை.

விஷ்ணுவை அங்குள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார் சிவலிங்கம். அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டது போல் பள்ளிக்கூடத்துக்குப் போனானே தவிர படிப்பில் பெரிதாக ஈடுபாடு காட்ட முடியவில்லை.

"தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனை மரத்தில் நெறி போட்டதாம் என்பது அது போல வேறெங்கெங்கோ பிரச்சனைகள் நடக்க கொழும்பிலை கஸ்டப்பட வேண்டியிருக் குது"- அவன் இருந்த இடத்தில் தேடுதல், குண்டு வெடிப்புகள், சோதனைகள் நடந்த போது விஷ்ணு இவ்வாறு கூறிச் சலித்துக்கொள்வான்.

படிப்பில் மிகத் திறமை சாலியாக இருந்தும், அவனுக்குப் படிப்பு இதனால் மூளையில் ஏறவில்லை. படிப்பது ஏதோ கஸ்டமான காரியமாக இருந்தது. பெரியப்பா கொடுக்கும் ஊக்கத்தினால் அவருக்காகப் படிப்பது போல் படித்து,

க. பொ. த சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்தான். அதற்கு மேல் படிப்பதற்கு அவனுக்கு முடியாம லிருந்தது. சிவலிங்கம் விடவில்லை. வற்புறுத்திப் படிக்க வைத்தார். ஆயினும் உயர்தரப் பரீட்சையில் தோல்வியே கிடைத்தது.

அவனது மனதில் ஏற்பட்ட விரக்தி, வெறுப்பின் காரணமாக, தான் வைத்தியராக அல்லது பொறியிய லாளராக வரவேண்டுமென்று கண்ட கனவு கருகிப்போனதையிட்டு அவன் அக்கறைப்படவில்லை. "பெரியப்பா, இனி என்னாலை படிக்கேலாது. திரும்ப சோதினை எடுக்கவும் ஏலாது" என்றான்.

விஷ்ணுவின் நிலையைப் பார்த்து அவர் இரக்கப்பட்டார். இவனது மனதுக்கு இதமாக ஆதரவாக ஏதும் செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

"சரி தம்பி, நீ இனிப் பள்ளிப்படிப்பை விட்டிடு. ஆனால் மற்றவர்களுக்குப் பாரமாயிருக்காமல் உன் சொந்தக்காலிலை நிக்கிற நிலை வந்தால் உனக்குக் கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்"- பெரியப்பா இப்படிக் கூறியது அவனுக்கு மனதில் சிறிது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

"நான் எப்பிடிப் பெரியப்பா சொந்தக் காலிலை நிக்கிறது" என்று நம்பிக்கையற்றவனாய்க் கேட்டான்.

"ஒரு கொம்பனியிலை வேலை எடுத்துத் தாறன் நீ அதிலை வேலை பார்த்துக் கொண்டு படிச்சு முன்னேறலாம்"

சிவலிங்கம் பக்குவமாகக் கூறி அவனை வேலைக்குப் போகச் சம்மதிக்க வைத்தார். அரைமனதோடு தான் வேலைக்குப் போனான். ஆனாலும் கையிலே சம்பளம் கிடைத்த போது, மற்றவர்களுக்குப் பாரமாக இல்லாமல் வாழ்க்கையைக் கழிக்கலாமே என்ற சிறிய ஆறுதல் கிடைத்தது.

உயர்தரப் பரீட்சை சித்திய டையாமல் ஏதோ வேலை பார்க்கிறான் விஷ்ணு என்பதை அறிந்தபோது அவனுடைய பெற்றோருக்கு மிகவும் கவலையாக இருந்தது. கவலையோடு அவனுக்குக் கடிதம் அனுப்பினார்கள்.

"அன்பு மகன் அறிவது, கொழும்பில் நீ படித்து எங்கள் லட்சியத்தை நிறைவேற்றுவாயென்றுதான் உன்னைப் பிரிந்திருக்கிற துன்பத்தையும் தாங்கி உன்னைக் கொழும்பில் படிக்க விட்டோம். நீ ஏ எல் சோதனையும் பெயிலாகிவிட்டாய். கொழும்பில் நீ சின்ன வேலை பார்த்து உன் வாழ்க்கைக்கும் அது போதாமல் தான் இருக்கும், ஆனபடியால் நீ மீண்டும் யாழ்ப்பாணத் துக்கு வா நாங்களும் இப்ப வலிகாமத் துக்குத் திரும்பவும் வந்து எங்கள் வீட்டில் தான் இருக்கிறோம்.. நீயும் வந்தால் கமம் செய்யத் தொடங்கலாம் எங்கள் தோட்ட மெல்லாம் பற்றையாகிக் கிடக்கிறது. உடனே புறப்பட்டு வா"

தந்தையார் எழுதிய இந்தக் கடிதம் 08.03.2000 அன்று அவனது கையில் கிடைத்தது. சிறிது நிம்மதி யோடிருந்த அவனை இக்கடிதம் மிகவும் குழப்பமடைய வைத்தது. பல விதமான யோசனைகளும் அவனது மூளைக்குள் குடைந்தன. மீண்டும் அங்கு போவதா" என்றெண்ணியபோது அவனுடைய மனம் மேலும் இறுகியது, பயங்கரமான சத்தங்கள் கேட்டவுடன் பதுங்குகுழிக்குள் பாய்ந்து அவஸ்தைப்பட்டதும், பெட்டி படுக்கைகளோடு ஊர் ஊராக அலைந்ததும், கண்ட கோரக்காட்சிகளும், அசௌகரியங்களும் மன வேதனைகளும் மீண்டும் நினைவில் வந்து வெறுப்பேற்றின. திரும்பவும் ஏன் என்னை அங்கு வரச்சொல்லி அப்பா வற்புறுத்துகிறார் என்று அப்பா மீதும் அவனுக்கு எரிச்சல் ஏற்பட்டது.

"ஒரு வேளை நான் நிறைய உழைத்துப் பணம் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிற படியால் தான் பரீட்சையில் சித்தியடையாததற்கு ஆறுதல் வார்த்தை எழுதாமல் இப்படி எனனுடைய மனத்தை வேதனைப் படுத்துகிறமாதிரி அப்பா எழுதியிருக்கிறாரோ என்று சந்தேகப்பட்டு சிவலிங்கம் பெரியப்பாவிடம் சொல்லி அழுவான்.



"பெற்றோருக்குப் பிள்ளை களிட்டை பலவிதமான எதிர்பார்ப்புகள் இருக்கிறது இயல்புதானே. தங்களோடை நீ வந்து சேர்ந்திருக்கட்டு மென்றே விருப்பத்திலை அப்பிடி எழுதியிருப்பார். உனக்கு எது நல்லதாய் வசதியாய் இருக்குதோ நீ அப்பிடிச் செய்;" என்று சிவலிங்கம் விஷ்ணுவுக்கு இதமாகவும் பதமாகவும் கூறினார்.



"பெரியப்பா, இங்கையும் வந்து சிலவேளை பிரச்சனைகளுக்கை அகப்படேக்கை வெளிநாட்டுக்குப் போயிடலாமா எண்ட நினைப்பு எனக்கு ஏற்படுகிறது. இப்ப அந்த எண்ணம் வலுப்பெற்றிட்டுது உடனை நான் வெளிநாட்டுக்குப் போகவேணும்" அவன் பிடிவாதமாய் நின்று அதற்கான முயற்சிகளில் இறங்கினான். சிவலிங்கம் அதைத் தடுக்கவில்லை. அவனுடைய மனதில் தனது ஊர் வீடுவாசல் பெற்றோர் உற்றார். எல்லாரையும் வெறுக்கின்ற மாதிரி ஒரு விரக்தி ஏற்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டி ருக்கும் அவர், இவனது விரக்தியைப் போக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசித்து விட்டு அவனிடம் கூறினார்.

"விஷ்ணு, நீ வெளிநாட்டுக்குப் போறதுக்கு நானும் என்னாலான உதவியைச் செய்யிறன் நான் சொல்லுறதை நீ கேட்க வேணும் மறுக்கக் கூடாது. உனக்கு நல்லதைத்தான் நான் செய்வன்" என்ற பெரிய பீடிகையோடு அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போவதாகக் கூறினார். அவனுக்கு விருப்பமில்லாவிட்டாலும் மறுக்க முடியாமல் சம்மதித்தான். கலியாணமும் நடந்தது. வெளிநாட்டுக்குப் போகின்ற முயற்சியும் தொடர்ந்தது. சிவலிங்கமும், விஷ்ணுவும் எவ்வளவோ முயற்சி மேற்கொண்ட போதும் அவனுக்குக் குழந்தையும் பிறந்த பிறகுதான் வெளிநாட்டுப் பயணம் கை கூடியது. அதுவும் அவன் தனியாகத்தான் போகக் கூடியதாக இருந்தது. மனைவியையும் குழந்தையையும் பின்னர் அழைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு அவன் போனான். சிவலிங்கத்துக்கு அவனது மனநிலை புரிந்திருந்தால், பெற்றார், உறவினர் மீது அவனுக்குப் பற்றின்மை ஏற்பட்டிருக்கிறமாதிரி வெளிநாட்டுக்குப் போய் மனைவி பிள்ளையையும் மறந்திருப்பானோ என்ற பயத்தில் மனைவி, பிள்ளையை கூட்டிக் கொண்டு போவது உன் கடமை என்று விஷ்ணுவுக்கு அடிக்கடி போனில் சொல்வார் "ஓம் பெரியப்பா நான் முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறன்" என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தாலும், ஆறு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் அவர்களைக் கூட்டிக் கொண்டுபோக வந்திருக்கிறான்.

....விமான நிலையத்திலிருந்து வீட்டுக்கு வரும் போது மனைவியிடம் கேட்டான் "ஓரிரு நாட்களிலை வெளிநாட்டுக்குப் புறப்படவேணும். நீங்களெல்லாம் றெடிதானே"

"ஓ......நானும் மகனும் றெடிதான்" என்றவள். சிவலிங்கம் பெரியப்பா சொன்ன விஷயத்தை அவனிடம் சொல்லவில்லை. வீட்டுக்கு வந்து சேர்ந்த போது பெரியப்பாவும் பெரியம்மாவும் ஆரவாரமாக அவனை வரவேற்றனர்.

"வெளிநாட்டுக்குப் போனதிலை நல்ல நிறமாய் மினுமினுப்பாய் வந்திருக்கிறாய். நல்லாய்த்தான் இருக்கிறாய்"

"என்ன பெரியப்பா, நான் டொக்ரராகி எங்கடை நாட்டிலை சேவை செய்ய வேணுமென்று சின்ன வயசிலை ஆசைப்பட்டனான். ஆனால் இப்ப அந்நிய நாட்டு ஆஸ்பத்திரியிலை பெட்சீற் விரிக்கிற கூலிக்காரனாய் இருக்கிறன். இதென்ன பெரியப்பா" என்றான் விஷ்ணு.

அவனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் தொனித்த சலிப்பு, விரக்தி, வெறுப்பைக் கவனித்த சிவலிங்கம், இவனிடம் அந்த விஷயத்தை எப்படிச் சொல்வதென்று தயங்கினார். எப்படியும் சொல்லித தானாக வேண்டும் என்று தீர்மானித்து அவன் சாப்பிட்டுவிட்டு தன் முன் வந்தமர்ந்ததும் இதமாக எடுத்துச் சொன்னார். "தம்பி விஷ்ணு, இந்த நாட்டுப் பிரச்சினை களாலை உன்னைப் போலை எத்தினையோ பேர் தங்கடை விருப்பங்கள், லட்சியங்கள் நிறைவேறாமல் ஏமாற்றங்கள் வேதனைகளுக்காளாகிப் போய் இருக்கினம். ஏதோ அதுகளைச் சீரணித்துக் கொண்டு எங்கடை கடமையளைச் செய்யவேணும். உனக்கும் இப்ப ஒரு கடமை காத்துக் கொண்டிருக்குது. நீ மறுக்காமல் செய்ய வேணும்"

"என்ன" என்றான் விஷ்ணு சலிப்போடு, "ஒரு மாதமாய் உன்ரை அப்பா படுக்கையாய்க் கிடக்கிறாராம். உன்னை ஒருக்காப் பாக்க வேணும் மெண்டு துடிக்கிறாராம். கட்டாயம் நீ போக வேணும;"

"என்னாலை அங்கை போக முடியாது பெரியப்பா, அங்கை பட்ட கஷ்டங்கள், அடைந்த ஏமாற்றங்கள், பயங்கரங்கள் எல்லாம் மனதிலை பதிஞ்சு போய்க் கிடக்கு. திரும்பவும் என்ரை மனதிலை குழப்பம் வரும் அக்கா அப்பாவை நல்லாய்ப் பாத்துக்கொள்ளுவா, என்னை வற்புறுத்தாதையுங்கோ." முதன் முதலாக அவன் மீது சிவலிங்கத்துக்கு கோபம் ஏற்பட்டது.

"உன்னைப் பெத்து வளர்த்த வன்ரை கடைசி ஆசையைக் கூட உன்னாலை நிறைவேற்ற முடியா தெண்டால் நீயும் ஒரு பிள்ளையா போ" என்றார், கடுமையான குரலில், விஷ்ணு கண்கலங்கி மௌனமாய் நிற்பதைப் பார்த்து அவருக்கு இரக்கமாக இருந்தது.

"தம்பி, நானே உன்னைக் கூட்டிக் கொண்டு போறன் போய் ஒருக்கா அப்பாவைப் பாத்திட்டு உடனை திரும்பி விடுவம். வருவியா"? என்றார். அவன் மறுக்கவில்லை. அவர்கள் எல்லாருமாக விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். விஷ்ணுவின் அக்காவின் கணவர் காத்திருந்து அவர்களை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார். நேரே அப்பா படுத்திருந்த அறைக்குள் கூட்டிக் கொண்டு போய் "விஷ்ணு வந்திருக்கிறான்" என்று தகப்பனின் காதில் விழும்படி கூறினர். தந்தை கண்திறந்து பார்த்துவிட்டு எழுந்திருக்க முயன்றார். எல்லாருமாகப் பிடித்து உட்காரவைத்தனர்.

"பார்த்தீங்களா அதிசயத்தை பத்து நாளாய் அசைவே இல்லாமல் அப்பா படுத்திருந்தவர். மகனைக் கண்ட வுடனை எழும்பப் பார்க்கிறார்" மகள் சொன்னதைப் புரிந்து கொண்டு புன்முறுவல் காட்டினார் தந்தை. "குளிச்சுச் சாப்பிடு" என்றும் விஷ்ணுவிடம் கூறினார். விஷ்ணு வெளியில் வந்தான். முற்றத்தில் பல நிறங்களில் றோஜாப் பூக்கள் செடிகளில் மலர்ந்திருந்தன. அவன் அதைக் கவனிப்பதைப் பார்த்து அக்கா சொன்னாள். "தம்பி இதெல்லாம் நாங்கள் புதுசாய் நட்டு உண்டாக்கின றோஜாக்கள். இஞ்சை பார் பாரிஜாதம் கூட பூத்துக் கிடக்கு" என்றாள். அக்காவின் மகன் ஆட்டுக்குட்டியைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்தான். விஷ்ணு அருகே போய் அதனைத் தடவிக் கொடுத்தான். அதே நேரம் பிள்ளையார் கோயில் மணி கேட்டது

(தொடர்ச்சி 22ம் பக்கம்)



# பிரதேசச் சந்தைகள் அன்றும் இன்றும்

உடுவில் கலைதாசன்.

வட மாகாண விவசாயிகளின் மத்திய சந்தையாக விளங்கியதும், இன்றும் விளங்கி வருவதும் சுன்னாகம் மத்திய சந்தையாகும். சுன்னாகம், பட்டிணசபையாக இருந்த காலத்தில் பட்டண சபை சந்தையாக விளங்கிய சுன்னாகம் இன்று பிரதேச சபையின் பிரதான சந்தையாக விளங்குகின்றது. யாழ். மாவட்ட விவசாயிகள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த இங்கு வருவார்கள். தென்னிலங்கை விவசாயிகளின் உற்பத்திப் பொருட் களும் இங்கே சந்தைப்படுத்தப்பட்ட காலம் ஒன்றிருந்தது.

அக்காலத்தில் திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் கிரமமாகவும் தைப் பொங்கல், சித்திரைப் புத்தாண்டு விசேட காலங்களிலும் இங்கே சந்தை கூடும். ஆனால் இப்பொழுது நாளாந்த சந்தையாக மாறியுள்ளது.

அடுத்து உடுவில் மருதனார் மடம் சந்தை. இது உடுவில் கிராம சபையின் ஆதிக்கத்துக்குட்பட்டது. உடுவில், இணுவில், சங்குவேலி, நந்தாவில் போன்ற ஊர்களிலுள்ள விவசாயிகளின் உற்பத்திப் பொருட் களை விற்பனை செய்யக் கூடியதாக செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு கிழமைகளில் கூடியது. தற் காலத்தில் வாரத்தின் எல்லா நாட்களிலும் சந்தை இடம் பெறுகின்றது.

இணுவில் சந்தை ஒரு சிறு சந்தையாகும். காலை 9.00 மணிக்குப் பின்னர் விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு வரும் வியாபாரிகள் மாலை 4.00 மணி வரை இங்கு வைத்து வியாபாரம் செய்வார்கள். விவசாயப் பொருட்கள் மட்டுமில்லாது, மீன், ஆட்டிறைச்சி போன்ற மாமிச வகைகளும் இங்கே விற்பனை செய்யப்பட்டன.

சுன்னாகம் மத்திய சந்தை யாக இருந்தாலும் சிறுசந்தையாக விளங்கிய மருதனார்மடம் சந்தைக்கு மாட்டுவண்டில் போன்றவற்றில் தூர இடங்களிலிருந்து மக்கள் வந்தார்கள். தற்காலத்தில் மருதனார் மடம் சந்தைக்கு லொறி போன்ற பாரிய வாகனங்களில் வந்து பொருட்களை ஏற்றிச் செல்லக் கூடியதாக இடவசதி இருப்பதால் தற்காலத்தில் இச் சந்தையே பிரதான சந்தைபோற் தொழிற்படுகின்றது.

சுன்னாகம் சந்தையுடன் இணைந்ததாக வாழைப்பழ சந்தை யும் விசாலமான இடப்பரப்புடன் அமைந் துள்ளது. வாகனங்கள் தரித்து நின்று வியாபாரம் நடைபெற இது வசதி யுடையது. சுன்னாகம் சந்தையின் பிரதான கட்டிடம் முன்னர் யாழ்ப்பாணத்தின் பிரதான சந்தையாக இருந்து 1981 ல் எரியூட்டப்பட்ட சந்தை போன்று பாரிய கட்டிட அமைப்பைக் கொண்டுள்ளது. தொன்மையான கட்டிட அமைப்பு காலத்துக்கு காலம் திருத்தங்கள் செய்யப்பட்டு இன்றும் மக்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றது.

மருதனார்மடம் சந்தையில் அமைந்துள்ள கிணறும், கல் தொட்டியும் படத்தில் காணப் படுகின்றது. மாடுகளுக்கு தண்ணீர் குடிக்க வசதியாக கல்லிலே பொழியப் பட்ட தொட்டி இங்கே காணப் படுகின்றது. எம்மவர்களின் சமூகச் செயற்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. 6 அடி நீளமும் 2 அடி அகலமும் $1\frac{1}{2}$ அடி உயரமும் கொண்ட கற்தொட்டி நீரச்சுனையாக கால் நடைகளுக்கு உதவிவந்தது. இன்று காய்ந்தே கிடக்கின்றன. நம்மவரின் கருணை யுள்ளத்தை எடுத்துக் கூறிக்கொண்டு, எம் முன்னோரின் முதுசொமான பல பாவனைப் பொருட்கள் இக் காலச் சந்ததியரால் கைவிடப்பட்டு அழிந்து போக விடப்பட்டிருப்பது போல இக்கல் தொட்டியை இப்படியே அழிந்து போகவிடாமல் எடுத்துப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு வலி.தெற்கு பிரதேச சபைக்கு இருக்கின்றது. எனக் கருதுகின்றேன். ■

## சிறு கதை மன மாற்றம் 20ம் பக்கத் தொடர்ச்சி

"தம்பி இப்ப கோயிலெல்லாம் பெரிசாய்க் கட்டி நல்ல வடிவாய்க் கிடக்கு போய்ப்பார் தம்பி" என்றாள் அக்கா. வேறெந்தச் சத்தமும் கேட்கவில்லை. அவர்களது தோட்டத்தில் வேலை செய்த ஆட்கள் வந்து அன்றைய சம்பளத்தை அக்காவிடம் வாங்கிக் கொண்டு சென்றனர்.

"தோட்ட வேலையெல்லாம் கூலி கொடுத்தா செய்விக்கிறாய்" என்றான் விஷ்ணு "ஓம் தம்பி அப்பாவுக்கும் ஏலாது அத்தானும் கடை நடத்திறார். நானென்ன செய்ய தோட்டங்களை அழிய விடாமல் கூலி குடுத்து செய்விக்கிறன்" - அக்காவின் வார்த்தைகள் அவனது மனதைக் குடைந்தன.

"அக்கா எவ்வளவு கெட்டிக்காரி. பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒழியாமல் தைரியமாய் முகம் குடுத்து எல்லா வற்றையும் சமாளிக்கிறா. எனக்கும் அப்பிடிச் செய்ய வேணும் போலை கிடக்கு வெளிநாட்டிலை பெட்சீற் விரிக்கிற வேலைதானே, அதிலும் பாக்க இங்கை யிருந்து எங்கடை தோட்டங்களிலை பயிர் செய்யப் போறன்" அவனது மனமாற்றம் எல்லாரையும் மகிழ்வித்தது.

(யாவும் கற்பனை)



கிராமியத் தெய்வ வழிபாட்டில்

# மல்லாகம் முதலியம்மாள் ஆதிபராசக்தி ஆலயம்

கிராமிய மட்டத்தில் நாட்டார் வழிபாடாகவும் அம்பிகையை வழிபடும் மரபு உள்ளது. இதில் காளி, மாரி அம்மன், கண்ணகி சிறப்புப்பெறும் தெய்வங்களாகும். அவ்வகையில் மல்லாகத்தில் முதலியம்மன் ஆதி பராசக்தி ஆலயம் சிறப்பானது. இங்கு தமிழில் பூசை இடம் பெறுகிறது. கிராமிய வழிபாட்டில் இறைவனுக்கும் வழிபடுவோருக்கும் இடையே தரகர்கள் இல்லை. தாமே நேரடியாகப் பொங்கி, மடைபரவி, உணர்வு பூர்வமாக இறைவனை வழிபடுகிறார்கள். வழிபடும் அடியவரின் சக்தியில் தெய்வம் வெளிப்பட்டு நிற்கும் என்ற நம்பிக்கை உண்டு. இம்முதலியார் கோயிலில் பூசகர் அம்மாவாகக் காணப்படுகிறார். ஆக்கபூர்வமான அருள் தரும் ஞானத்தை உள்ளத்திலே உணர்ந்தால் போதும். இதை திருமந்திரம்



"சக்தியை வேண்டிச் சமயத்தோர்கள் உண்பர்
சக்தி அழிந்தது தம்மை மறந்ததால் ......" என்று
உணர்த்துகின்றது.

சக்தி கரகாட்டம் மூலம் சிறப்புப் பெறுகிறாள். கரகம் ஆடப்படுவதுண்டு.

"ஒண்ணாங்கரகமடி எங்க முத்துமாரியம்மா
ஒசந்த கரகமடி எங்க முத்துமாரியம்மா"

என்ற கிராமியப் பாடலுக்கிணங்க இங்கு பூசகர் கரகத்துடன் கலை ஆடுவதைக் காணலாம். அத்துடன் கையில் வேப்பிலையுடனும் தலைமேல் தீபம் வைத்து கரகம் ஆடி வாக்குச் சொல்லுவார். அம்மாள் இப்பூசகர் மேல் விழாக் காலங்களில் வந்து வாக்கு சொல்லுகிறாள்.

ஒரு விதத்தில் எங்கள் கிராமியச் சடங்குகள் எல்லாம் அம்மன் மனம் குளிரவும், மக்கள் மனம் சிறக்கவும் இயற்றப்படுகிறன. இவ் ஆலயத்தில் திங்கள், வெள்ளி ஆகிய தினஙகளில் பெரும் பொங்கல் பொங்கி மடை பரவப் படுகிறது. இங்கு நிர்வாகமோ, தொண்டர் சபையோ இல்லை. ஆனால் ஆலயப் பூசை நேரத்தில் பெருமளவு மக்கள் வந்து தொண்டு செய்வர். இத்துடன் அனைத்து விழாக்களும் சிறப்பாக நடைபெறுகிறன. உ+ம் வரலஷ்சுமி, விரதம் கேதாரகௌரி விரதம் போன்றன சிறப்பான விழாக்களாகும்.

அம்மன் வாழ்வை ஒழுங்கு படுத்துபவள். தனிமனித ஒழுக்கம், சமூக ஒருமைப்பாடு கூடியதான விழாக்களில் இசையும் இணைகிறது. மக்கள் அம்பாளிடம் உயிர்ப்பிச்சை வேண்டல், பிள்ளைவரம் வேண்டல், கறுமகொடிய நோய் தீர்த்தல், தோசம் நீங்கல் கருதி வழிபடுவர். குறிப்பாக இதை தாய் நிறை வேற்றுவதாக துணியில் ஒரு ரூபாய் கட்டி இத்தல விருட்சத்தில் கட்டித் தாயை வேண்ட தாய் இவற்றை கொடுக்கிறாள். இதைவிட இங்கு மூலஸ்தானத்தில் ஆதிபராசக்தி இடம்பெற, அறுகோண அடிப்படையில் மூலஸ்தான கட்டடம் அமைவு பெற்றுள்ளது. மேலும் ஆலய நடுவில் தலவிருட்சங்களாக ஆலமரமும் அதன் நடுவில் ஆண் பனையும் காணப்படுகிறன. இதன் முன் வீரமாகாளி அம்பாள் காணப்படுகிறாள். இங்கும் இரண்டாவது மரம் ஆலமரமும் நடுவில் பெண் பனையும் காணப்படுகிறன. இதில் ஆதிபராசக்தி சிங்கத்தில் ஆலமரத்தில் மக்கள் பார்க்க கூடியதாய் உள்ளார்.

வசந்த மண்டபத்தில் ஆதிபராசக்தி சந்தோச தோற்றத்துடன். இடம்பெற, அடுத்து நாகபூசனி அம்மன் காணப்படுகிறாள். இலங்கையின் ஆதிக்குடிகள் நாகர் என்போராவார். அவர்கள் நாக வழிபாட்டை



மேற்கொண்டனர். நாக வழிபாடே இன்றும் நயினை நாகபூசனி, சீரணி நாகபூசனி, போன்ற ஆலய வழிபாடுகளில் நிலவுகின்றது. இம் முதலியம்மன் ஆலயத்து நாகபூசனி சந்நிதியில் நாகபாம்பு வந்து பால் குடித்து விட்டு செல்கிறது. இதைவிட ஆலய சூழலில் புற்றும் அதில் நாகமும் காணப்படுகிறன.


இக்கிராமிய வழிபாட்டில் கன்னிக்கால் எடுத்துவரல், தீப்பள்ளயம், அம்மன் வீதியுலா வரல் முதலானவையும் அமைகின்றன. சடங்குகளில் இதில் சாதி சமய வேறுபாடு அற்ற நிலையில் அடியார் கூட்டத்தில் கலந்து விடுகின்றனர். இதுவே கூட்டுமன வெளிப்பாடாகும். நவீன மயமாக்கலும், நவீன அறிவுகளும் தந்த நெருக்கடியான வாழ்வில் மனித விழுமியங்கள் மீட்கப்படுமா? எனச் சிந்திக்கும் போது கிராமம் பற்றிய சிந்தனையும், கிராமிய தெய்வத்தின் அவசியமும் வேண்டப்படுகிறன. இன்றைய அவல வாழ்வின் துன்பதுயரத்தை இக்கிராமிய தெய்வத்திடம் மக்கள் சொல்லி அழுகின்றார்கள்.

"தாயே! இந்தக் குழந்தையைப் பாரம்மா
அவரை மீட்டுத்தா அம்மா....
தாயே! உனக்குத்தான் இந்தத்
தாயின் நிலை புரியுமம்மா
கருனை காட்டம்மா........
இல்லை என்றால்
இந்ததீயில் எங்களைக் கூப்பிடம்மா."

கு. கோபிராஜ்
B.A.(Hons)
சண்டிலிப்பாய்

இது மட்டக்களப்பு – புன்னைச் சோலையில் காளிகோயிலில் கைக்குழந்தையுடன் தீ மிதித்த இளம் தாயின் குரலாகும்.

அனைத்துப் பொறுப்புகளுக்கும், ஆலய பூசகரான பிராமணரல்லாத முருகேசு சுப்பிரமணியம் காணப்படுவதுடன் இங்கு இவர் கலை ஆடி வாக்கும் சொல்கிறார். இதைவிட இவ் ஆலயச் சூலம் தங்கத்தால் ஆனது. அதைவிட பல ஆண்டுக்கு முன்னர் இவ் ஆலயத்தில் முன் ஒர் ஆலயம் இருந்து உள்ளது. இதில் இதைவிட தானாக தோன்றிய சூலம், வேல், பிள்ளையார் போன்றன காணப்பட்ட அற்புதம் நிகழ்ந்து உள்ளது. இப்பூசகர் ஆரம்பத்தில் ஒரு கல்லை வைத்து வழிபட்டார். பின்னர் 32 வருடமாக வழிபாடுகள் இயற்றப்படுகின்றன.



பணம் எதிர்பார்க்கப்படுவதில்லை. கொடுப்பதை ஏற்றுக்கொள்வதுடன் ஒரு ரூபாவுடன் அர்ச்சனை செய்யலாம். அர்ச்சனை அனைத்து பூசையும் தமிழில் நடைபெறுகிறது. சுன்னாகத்தின் அண்மைக்கிராமமான மல்லாகத்தில் (J/212) இல் ஆலயம் அமைந்துள்ளது.

ஒரு தடவை தரிசித்தால் உண்மையை உணர்வீர்கள் ■



# தமிழ் இலக்கிய வரலாறு எழுதுதலில் ஈழத்தறிஞர் செல்வாக்கு

ஈழத்து இலக்கிய வரலாறென்பது தமிழ் இலக்கிய வரலாற்றுப் பெரும் பரப்பின் ஒரு பகுதியாக அமைகின்றது. இதனால் ஈழத்து இலக்கிய வரலாற்று வளர்ச்சியினை ஆய்வு செய்வதற்கு முதலிலே தமிழ் இலக்கிய வரலாறு எழுதுதல் பற்றியும் அம் முயற்சியில் ஈழத்தவரின் செல்வாக்கு எவ்வாறு மேலோங்கி உள்ளது என்பது பற்றியும் அறிந்து கொள்வது அவசியமானதாகும். ஈழத்து இலக்கிய வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும் சங்ககாலத்துடனேயே தொடங்குகின்ற போதும் ஈழத்து இலக்கிய வரலாற்றைப் போலன்றி இடையீடற்ற தொடர்ச்சியான வரலாறாகத் தமிழிலக்கிய வரலாறு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இலக்கிய வரலாறு எழுதுதலின் முற்படு முயற்சியாகத் தமிழ்ப்புலவர் சரித்திரங்கள் எழுதப்படும் நிலையைத் தமிழிலே காண முடிகின்றது. இவ்வகையில் முறையான, ஓரளவிற்கேனும் முழுமையான தமிழ்ப்புலவர் வரலாறு எழுதும் ஆரம்ப முயற்சிகள் ஈழத்தவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஈழத்தவரான சைமன் காசிச் செட்டியின் தமிழ் புளூராக் என்னும் 1859 இல் வெளிவந்த நூலே ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ் புலவர் சரித்திரம் என்ற வகையில் முதல் நூலாக உள்ளது. இதனைத் தொடர்ந்து இன்னொரு ஈழத்தவரான ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையின் பாவலர் சரித்திரதீபகம் 1886 இல் வெளிவந்தது. இவ்விரு நூல்களின் முக்கியத்துவம் பற்றி அடுத்த இயலில் ஆராயப்பட உள்ளதால் இங்கு சிறு அறிமுகம் மட்டுமே இடம் பெறுகின்றது.

## 01. திராவிடப் பிரகாசிகை

முழுமையான இலக்கிய வரலாற்றுத் தன்மை கொண்ட நூலாக அமையாது விடினும் இலக்கிய வரலாற்றுத் துறையின் ஆரம்ப, ஓரளவுக் கேனும் வளர்ச்சி அடைந்த நிலையைப் பிரதிபலிக்கும் முதல் நூலாக சபாபதி நாவலரின் திராவிடப் பிரகாசிகை 1899 ஆம் ஆண்டிலே வெளிவந்தது. யாழ்ப்பாணம் வடகோவையைச் சேர்ந்த சபாபதி நாவலர் (1843 - 1903) தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். யேசு மத சங்கற்ப நிராகரணம், சிதம்பரசபாநாதபுராணம் முதலிய செய்யுள் நூல்களையும் இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, திராவிடப் பிரகாசிகை முதலிய உரை நடை நூல்களையும் வெளியிட்டவர்.

ம.பா. மகாலிங்கசிவம்
ம.பா. பாலமுரளி

இவற்றுள் திராவிடப் பிரகாசிகை தமிழ் இலக்கியம், இலக்கணம், சாஸ்திரம் தொடர்பாகத் தமிழில் நிலவிய பிழையான கொள்கைகளைக் கண்டித்துத் தமிழ்

மொழியின் சிறப்பை நிலைநாட்டும் வகையில் எழுதப்பட்டது. இந்நூல் ஐந்து இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது.

**01 தமிழின் தெய்வப் பழமை மரபியல்**

தமிழ் மொழியின் இயல்பு, தமிழிற்கும் தமிழ்க் கடவுளர்க்கும் இடையேயான ஐதிக வழிவந்த தொடர்பு (தெய்வப் பழமை) தமிழ்ச் சொல் முடிவு என்பன கூறப்பட்டுள்ளன.

**02. இலக்கணவியல்:-**

அகத்தியம் என்றும் இலக்கண நூலின் தொன்மை, தொல்காப்பியர் கூறும் ஐந்திணை முதலான இலக்கணக் கருத்துக்கள் இங்கு கூறப்பட்டுள்ளன.

**03. இலக்கியமரபியல்**

திராவிடப் பிரகாசிகையை இலக்கிய வரலாறெழுதும் முயற்சியின் முன்னோடி நூலாகக் கொள்வதற்கு இப்பகுதியே காரணமாக அமைகின்றது. இங்கு இலக்கியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன.

**அ. திருமுறையிலக்கியம்**

திருமுறைகள், நாலாயிரதிவ்ய பிரபந்தம், திருப்புகழ், திருக்குறள், என்பனபற்றி இங்கு விவரிக்கப்படுகின்றது. திருக்குறள் சைவசமயச் சார்பானது என்பதற்கான பல ஆதாரங்களும் தரப்படுகின்றன.

**ஆ. கடைச்சங்க இலக்கியங்கள்**

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் பற்றிய விளக்கங்களுடன் கல்லாடம், பதினெண் கீழ்க் கணக்கு, பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை என்பனவும் கடைச்சங்க இலக்கியங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிஞ்சிப்பாட்டுப் பற்றி,

"இது கபிலர் ஆரியவரசன் பிரகதத்தனைத் தமிழ் அறிவுறுத்தற்குப் பாடியது. தலைவியினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடு நிற்றலைப் பொருளாகவுடையது. இது மலைவளனும் இல்லற நெறியும் தம்பதி தம்முட் பேணும் அன்பின் நீர்மையும் கற்பின் சிறப்பும் மீக்கூறும். இது களவென்னும் கைகோள் பற்றியெழுதலிற் குறிஞ்சிப்பாட்டென்று உணர்க" [1]

எனக் கூறுவது அவரது இலக்கிய அறிமுக முறையியலுக்கு ஒரு வகை மாதிரியாக அமைகின்றது.

**இ. காவிய இலக்கியங்கள்**

இப்பகுதியில் ஐம்பெருங்காப்பியங்கள் சூளாமணி, நைடதம் என்னும் காப்பியங்களுடன் ஈழத்துக் காப்பியமான இரகுவமிசமும் சேர்க்கப்பட்டுள்ளது. சபாபதி நாவலரால் திராவிடப் பிரகாசிகையிலே சேர்க்கப்பட்ட ஒரேயொரு ஈழத்து இலக்கியம் இரகுவமிசம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



**ஈ. புராண இலக்கியங்கள்**

கந்தபுராணம். கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப் புராணம் முதலிய புராணங்கள் பற்றிய தகவல்கள் இடம் பெறுகின்றன.

**உ. இதிகாச இலக்கியம்**

இராமாயணம், பாரதம்

**ஊ. பல்வகைப் பிரபந்தங்கள்**

குமரகுருபரர், சிவப்பிரகாச முனிவர், சிவஞானயோகிகள், அவரது மாணாக்கர்கள் ஆகியோரின் பிரபந்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இங்கு இலக்கியங்களுக்கோ, இலக்கிய வடிவங்களுக்கோ, முதன்மை கொடுக்காமற் புலவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இந்நூலின் முக்கியத்துவத்தை,

"சபாபதி நாவலர் என்பவர் நாடு போற்றும் நற்றமிழ்த் தொண்டராவார். தமிழ் இலக்கிய வரலாற்றை, முதன்முதலாகத் திராவிடப் பிரகாசிகையை நூல் வடிவில் தந்த சிறப்புக்குரியவராவார்."[2] எனக் க.த. திருநாவுக்கரசு கூறுகின்றார்.

சைவசமயத்திற் காணப்பட்ட பௌராணிகக் கதை மரபுகளைத் தனது கருத்துக்களை நிலை நாட்டுவதற்கான ஆதாரங்களாகக் கொண்டமை, பன்னிரு திருமுறைகள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பவற்றைக் கடைச்சங்க இலக்கியங்களாகக் கொண்டமை முதலிய குறைபாடுகள் இந்நூலிற் காணப்படுகின்றன. எனினும் அறிவியல் பூர்வமான ஆய்வு முறையியல் அதிகம் பரவாத காலச்சூழலில் இத்தகைய குறைபாடுகள் தவிர்க்க முடியாதவையே,

**2. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்**

தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் முயற்சியின் அடுத்த கட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் நூலும் ஈழத்தவராலேயே எழுதப்பட்டது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். மல்லாகம் வி. கனகசபைப் பிள்ளையின் `The Tamils 1800 yearsa go (ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்) என்றும் ஆங்கில நூலே இச்சிறப்பு வாய்ந்ததாகும். 1895 இல் 'மதராஸ் றிவியூ என்னுஞ் சஞ்சிகையில் அவர் தொடராக எழுதி வந்த கட்டுரைகளே 1904 இலே நூலாகத் தொகுக்கப்பட்டது.

வி. கனகசபைப்பிள்ளையின் நூல் வெளி வருவதற்கு முன்னர் 1856 இல் கால்டு வெல்லின் A Comparative Grammar of the Dravidian Languages (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்) என்னும் நூல் வெளிவந்திருந்தது. கால்டு வெல் தமது நூலிலே தமிழ் இலக்கியங்கள் அனைத்துமே கி.பி 8 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை எனத் தவறான கருத்தைத் தெரிவித்திருந்தார். இதேவேளை இந்திய வரலாற்று நூல்களை எழுதிய வட இந்தியர்களும் தென்னிந்தியாவைப் பற்றியோ, தமிழகத்தின் தொடக்ககால இலக்கிய, அரசியல் வரலாற்றைப் பற்றியோ எதனையும் குறிப்பிடவில்லை. ஆர்.ஜி..பண்டாரகர் (Early History of the Dekkan 1894) கே.பி.

ஜஸ்வால், ஏ. எஸ். அல்டேகர் போன்றோர் தென்னிந்தியாவைக் குறிப்பாகத் தமிழகத்தைப் புறக்கணித்தனர். இப் போக்கை மாற்றியமைத்துத் தமிழறியாத ஏனையவர்களும் தமிழின் தொன்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் தமிழறிஞர்கள் பலர் ஆங்கிலத்திலே தமிழகத்தின் வரலாற்றை எழுத முற்பட்டனர். இவர்களுட் காலத்தால் முற்பட்டவராக வி. கனகசபைப்பிள்ளை விளங்குகின்றார்.

இக் காலப் பகுதியில் தமிழக இலக்கிய வரலாற்றாசிரியர்களில் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை மாத்திரமே 'A Primer of Tamil Literature' என்ற நூலை வெளியிட்டிருந்தார். ஏனைய இலக்கிய வரலாற்று நூல்கள் 1920 களிலேயே வெளிவரத் தொடங்கின. கே.எஸ். ஸ்ரீநிவாச பிள்ளையின் தமிழ் வரலாறு (1922) வி. எஸ். துரைசாமிப்பிள்ளையின் தமிழ் இலக்கியம் (1922) பி. டி. சீனிவாச ஐயங்காரின் History of Tamils (1929) எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் Tamil Literature (1929) என்னும் நூல்கள் இவ்வகையிலே குறிப்பிடத்தக்கவை.

திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம் என்பவற்றின் தேவையை நிறைவு செய்வதற்காகத் தமிழின் பெருமை பேசும் நூல்களின் தேவை உணரப்பட்ட காலத்தில் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை இந்நூலைத் தமிழிலே மொழி பெயர்த்தார். 1956 இல் மொழி பெயர்க்கப்பட்ட 'ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்'[1] என்னும் இந்நூலின் முக்கியத்துவத்தை, "மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் எழுவதற்கு முன்னே இவ் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் பற்றிய இன்றைய ஆர்வங்களைக் கூடப்பேரளவு வளர்க்கத்தக்க பெருநூலொன்றை ஈழத்துப் பெருந்தமிழ் மகனாரான திரு.வி. கனகசபை அவர்கள் இயற்றினார்."[3] என நூலைப் பதிப்பித்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் விளக்குகின்றனர்.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்று அவர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட காலப்பகுதி கி.பி 50 இற்கும் 150 இற்கும் இடைப்பட்ட நூறு வருடங்கள் ஆகும். கனகசபைப்பிள்ளை தமது நூலின் முதல் அதிகாரமான தோற்றுவாய் என்னும் பகுதியிலே கால்டு வெல் முதலியோர் "தமிழ் இலக்கியங்கள் கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோற்றம் பெற்றன" என்று கூறிய கருத்தைப் பல ஆதாரங்களுடன் மறுத்துரைக்கின்றார்.

"கி.பி 9ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் எதுவும் இல்லை என்பதே இன்று மேலை அறிஞரின் பொதுக்கருத்தாக இருந்து வருகின்றது. ஆனால் உண்மை இதற்கு நேர்மாறானது தமிழிலக்கியத்தில் தலைசிறந்த தற்பண்பு வாய்ந்த பகுதி முழுவதும் கி.பி 9 ஆம் நூற்றாண்டுக்கு முன் இயற்றப்பட்ட பகுதியே எனலாம். அவற்றுக்குப் பின் வந்தவை மிகப் பெரும்பாலும் சமஸ்கிருத ஏடுகளைப் பின்பற்றி இயற்றப்பட்ட கீழ்த்தரமான போலிப் பகர்ப்புக்களாகவோ மொழி பெயர்ப்புக்களாகவோ மட்டுமே கொள்ளத் தக்கனவாக உள்ளன."[4]
எனும் அவர் கூற்று கால்டுவெல் போன்றோரின் கருத்துக்களுக்கான மறுப்பாக அமைகின்றது.



முடிவுரை உட்படப் பதினாறு இயல்களைக் கொண்ட இந்நூலின் முதல் எட்டு இயல்களிலும் தமிழகத்தின் நிலப்பிரிவுகள் பற்றியும் கி.பி 50 - கி.பி 150 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலே தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர் உள்ளிட்ட மன்னர்கள் பற்றியும் கூறப்படுகின்றன. 9 ஆவது இயலாக அமையும். 'சமூக வாழ்வு' என்னும் இயல் ஆட்சி முறை தொடக்கம் தமிழர்களின் பல்வேறு வித சமூக வழக்குகள் (திருமண முறைகள், பல்வேறு கலைகள்) வரை பெரும்பாலும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குகின்றது.

10 -13 வரையுள்ள நான்கு இயல்கள் இலக்கியம் பற்றிப் பேசுகின்றன. திருவள்ளுவர் குறள், சிலப்பதிகாரக்கதை, மணிமேகலைக் கதை தமிழ்க் கவிஞர்களும் கவிதைகளும் என அவ்வியல்கள் அமைகின்றன. இவற்றுள் தமிழ்க் கவிஞர்களும் கவிதைகளும் என்னும் இயலே இந்நூலை இலக்கிய வரலாற்று நூலாகக் கொள்வதற்கான பல ஆதாரங்களைக் கொண்டுள்ளது.

இவ்வியலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்த கபிலர், பரணர், நக்கீரர், முடத்தாமக்கண்ணியார், ஔவையார், இளங்கோஅடிகள், திருவள்ளுவர் உள்ளிட்ட 17 புலவர்களின் வரலாறுகள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இக் காலத்தில் எழுந்த இலக்கியங்களாக,

| | | |
|---|---|---|
| கலித்தொகை | திருமுருகாற்றுப்படை | திருக்குறள் |
| குறிஞ்சி (ஐங்குறு நூற்றில் கபிலர்பாடிய பகுதி) | பொருநராற்றுப்படை | மணிமேகலை |
| | பெரும்பாணாற்றுப்படை | சிலப்பதிகாரம் |
| | பட்டினப்பாலை | இன்னாநாற்பது |
| பதிற்றுப்பத்து | மதுரைக்காஞ்சி | |
| புறநானூறு | மலைபடுகடாம் | |
| அகநானூறு | நெடுநல்வாடை | |
| குறுந்தொகை | பெருங்குறிஞ்சி | |
| நற்றிணை | | |

ஆகிய 19 இலக்கியங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. (ஒழுங்கமைப்பு நூலாசிரியர்களுடையது) அவர் கூறும் பெருங்குறிஞ்சி என்னும் நூல் 261 அடிகளைக் கொண்டது என்றும் அவரது குறிப்பின்படி குறிஞ்சிப்பாட்டுத்தான் எனக் கொள்ள முடிகின்றது. ஐங்குறு நூற்றில் குறிஞ்சித்திணை கூறும் பாடல்களைத் தனியே எடுத்துக் குறிஞ்சி எனப் பெயரிட்ட அவர் அதனைச் சிறு குறிஞ்சியாகக் கருதிக் (அவர்காலத்தில் 100 அடிகள் மட்டுமே கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றார்) குறிஞ்சிபாட்டைப் பெருங்குறிஞ்சியாகக் கொண்டிருக்கலாம்.

கால்டுவெல் முதலியோரின் கருத்தை நிராகரித்த வி.கனகசபைப்பிள்ளை மேற்குறித்த இலக்கியங்கள் கி.பி 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்பதற்குப் பல ஆதாரங்களைத் தருகின்றார்.

01. கி.பி 50 - 150 வரை எழுந்த இலக்கியங்களில் வழிபாட்டு முறை அடிப்படையில் பௌத்தமும் மிக முற்பட்ட காலச் சமணர்களாகிய நிகண்ட வாதிகளின் சமயமும் பரவியதைக் காண முடிகின்றது. எனினும் கி.பி.8ஆம் நூற்றாண்டின் பின்னர் இருந்ததைப்

போன்ற பௌத்த குருமார்களையோ புத்தரின் உருவச்சிலை வழிபாட்டையோ, தீர்த்தங்கரர் வழிபாட்டையோ இவ்விலக்கியங்களிற் காண முடியாமை.

02. சங்க இலக்கியங்கள் குறிப்பிட்ட தமிழகத்தின் தலைமைப் பேரூர்கள். துறைமுகங்கள், இறக்குமதிப் பொருள்கள் பண்டைக் கிரேக்க வரலாற்றாசிரியர்களான பிளினி (கி.பி. 79 வரை) தொலமி (கி.பி 163 வரை) ஆகியோரும் செங்கடற் பயணம் என்னும் வரலாற்று நூலும் (கி.பி 80 - 89) தமிழகம் பற்றித் தரும் தகவல்களுடன் ஒத்துள்ளமை.

03. சிலப்பதிகாரத்திற் கூறப்படும் இலங்கைக் கஜவாகு மன்னனின் காலத்தைச் சிங்கள மொழியில் அமைந்த மகாவம்சம், தீபவம்சம் என்பவற்றை அடிப்படையாக் கொண்டு துணிய முடிகின்றமை.

04. சிலப்பதிகாரத்திற் கூறப்படும் 'நூற்றுவர் கன்னர்' என்னந் தொடர் ஆந்திர மரபைச் சேர்ந்த 'சதகர்ணி' என்ற பட்டப் பெயருடன் ஆட்சி செய்த மன்னர்களைக் குறிப்பதாகக் கொண்டு முதலாம் சதகர்ணியின் காலம் கி.பி. 77 - 133 எனத் தீர்மானிக்க முடிகின்றமை.

என்பவையே அவரது ஆதாரங்கள் ஆகும். இவற்றுள் கஜபாகு மன்னன் பற்றிய செய்திகள் போன்றவற்றுடன் பிற்கால வரலாற்றாசிரியர்கள் முரண்பட்ட போதும் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட முடிவுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

கனகசபைப் பிள்ளை தான் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட காலப்புலவர் களையும், இலக்கியங்களையும் வகைப்படுத்தியதுடன் மட்டும் நின்று விடாது சங்க இலக்கியங்களுடன் ஆங்கில இலக்கியங்களை ஒப்பிட்டும் ஆய்வு செய்துள்ளார்.

"உரோமப் பேரரசின் இலக்கிய வரலாற்றிலே பேரரசன் அகஸ்டஸ் காலமே பொற்காலம் என்பர். தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அத்தகு பொற்காலம் அல்லது அகஸ்டஸ் காலம் ஒன்று உண்டு. அது கி.பி. முதல் நூற்றாண்டேயாகும்." [5]

எனச் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலமே தமிழரின் பொற்காலம் என்கின்றார். பிற்காலத்திலே திராவிடச் சார்புத் தமிழக அறிஞர்கள் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் சங்ககாலமே என்னும் கோட்பாட்டை முன்வைத்தமைக்குக் கனகசபைப் பிள்ளையின் இக் கருத்தே மூலமாக அமைந்ததெனலாம்.

சபாபதி நாவலர் தனது கருத்தை நிலை நாட்டச் சமயக் கதைகளையும் ஆதாரங்களாகக் கொண்ட நிலையிலிருந்து விடுபட்டு விஞ்ஞான பூர்வமான விடயங்களுக்கே கனகசபைப்பிள்ளை முதன்மை கொடுத்தார். சைவக் கடவுளர்களான சிவனையும் முருகனையும் சங்கத்துடனும் சங்க இலக்கியங்களுடனும் தொடர்பு படுத்தி வழங்கும் கதைகள் அண்மைக்காலம் வரை கூட நம்பப்பட்டு வந்த நிலையிலும், இவர் அவற்றைத் தனது நூலிலே சேர்த்துக் கொள்ளவில்லை. அது மட்டுமன்றி



இறையனார் அகப்பொருள் என்ற நூலை இயற்றியவர் சிவபெருமானே என்ற கருத்தினை மறுத்து,

> "இறையனார் (கி.பி 100 - 130):- இவர் அகப்பொருள் சார்ந்த இறையனார் அகப் பொருளின் ஆசிரியர். பின் நாட்களில் இவ்வாசிரியர் பெயர் சிவபெருமான் பெயருடன் ஒன்றுபடுத்திக் குழப்பப்பட்டு அதன் பயனாக 60 சூத்திரங்களடங்கிய அவரது சின்னஞ்சிறு நூல் சிவபெருமானின் ஒப்பு வந்த நூலாகக் கருதப்பட்டது." [6]

எனக் கூறும் போது அவரது அறிவியல் பூர்வமான ஆய்வு நோக்கினை இனங்காண முடிகின்றது.

இச் சிறப்புக்கள் காரணமாக இந்நூலின் முக்கியத்துவம் ஆய்வாளர்கள் பலராலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஏ.வி. சுப்பிரமணியஐயர் தமது தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி என்னும் நூலிலே தமிழ் ஆராய்ச்சியை வகுக்கின்றார். நான்கு கால கட்டங்களாக வகுக்கின்றார். இவற்றுள் முதற்காலகட்டத்தில் வெளிவந்த சிறந்த நூலாகக் கால்டு வெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தைக் கூறும் அதே வேளை இரண்டாங் காலகட்டத்தைச் சேர்ந்த சிறந்த நூலாக ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தைக் கூறுகின்றார். இதற்கான காரணத்தை

"பண்டைத் தமிழ் இலக்கியத்திற் காணப்படும் விஷயங்களையும் வெளிநாட்டார் நூல்களிலும் இந்திய இலக்கியத்திலும் பண்டைத் தமிழரைப் பற்றியுள்ள குறிப்புக்களையும் தொகுத்து அவற்றை நேர்மையுடனும் நுட்பத்துடனும் சரித்திரப் பாங்குடனும் பரிசீலனை செய்திருப்பது கனகசபைப்பிள்ளை செய்திருக்கும் ஆராய்ச்சியின் முக்கிய அம்சம்" [7] எனத் தெரிவிக்கின்றார், பொ. பூலோகசிங்கம், "பிள்ளையவர்களுடைய ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்னும் நூலிற் குறைபாடுகள் சில காணப்பட்ட போதும் அந்நூலே பண்டைத் தமிழரின் வரலாற்றை முதன் முறையாகப் பல கோணங்களிலிருந்து விளக்க எடுத்துக் கொண்ட முயற்சியாகும்." [8] என இந் நூலின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றார்.

<u>***அடிக்குறிப்புக்கள்***</u>

**தொடரும்....**

*1. சபாபதிநாவலர், திராவிடப்பிரகாசிகை, சித்தாந்த வித்தியாநு பாலன யந்திரசாலை, கும்பகோணம், 1899 பக். உஅச*
*2. திருநாவுக்கரசு த, இலங்கையில் தமிழ்ப்பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை 1978 பக்167*
*3. கனகசபை வி, ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் (அப்பாத்துரை கா.பதி.) திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி 2ஆம் பதிப்பு, 1962. பக். எ*
*4. மேலது . பக் 5*
*5. மேலது . பக் 6*
*6. மேலது . பக் 359*
*7. யோகராசா செ., சண்முகலிங்கம் க, (தொகு) தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியும் வரலாறும் (கட்டுரைத் தொகுப்பு) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 1996*

அட்டைப்பட எழுத்தாளர் அறிமுகம்

ஏழாலை

# திருமதி. புஸ்பராணி இளங்கோவன்

(தமிழ்ப்பிரியா)

எழுபதுகளின் முற்கூற்றில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சஞ்சிகை நிகழ்ச்சியில், 'இதனை வரைந்தவர் சுன்னாகம் ஏழாலையைச் சேர்ந்த..." என அழகு தமிழில் அறிவிப்பாளர் கூற ஆரம்பித்ததுமே "தமிழ்ப்பிரியா" என நேயர்களின் உதடுகள் சொல்லி முடிக்குமளவிற்கு சிறுகதை, நாடகம், மெல்லிசைப்பாடல், இசையும் கதையும், கவிதை என பன்முக ஆளுமை கொண்டு மிக்க பிரபல்யத்துடன் விளங்கியவர் புஸ்பராணி முத்தையா எனும் இயற்பெயரைக் கொண்ட தமிழ்ப்பிரியா என புலோலியூர் ஆ. இரத்தினவேலோனால் சிலாகிக்கப்படும் தமிழ்ப்பிரியாவின் பெயர் புஸ்பராணி ஆகும்.

வானொலி நேயர்களுக்கு மட்டுமன்றி பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும், சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர்கதைகள், என எழுதிப் புகழ்பெற்றவராவார். ஈழநாடு, சிந்தாமணி, சுடர் இந்திய சஞ்சிகைகள் இதயம்பேசுகிறது,குங்குமம், மங்கை போன்றவற்றிலும் எழுதியவராவார். தினகரன், வீரகேசரி, ஈழமுரசு, மல்லிகை, சிரித்திரன், கலாவல்லி, அமிர்தகங்கை, என்பவற்றுடன் அச்சமயத்தில் வெளிவந்த பல சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள்இடம் பெற்றன.திருமணத்தின் காரணமாக, பிரான்ஸ் நாட்டில் கணவர் இளங்கோவனுடன் தற்பொழுது வசித்து வருவதால் இலங்கையில் இவரது எழுத்துக்கள் இடம்பெறாவிடினும் வெளிநாடுகளில் வெளிவரும் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவரது ஆக்கங்கள் இடம் பெறுகின்றன.

இடப் பெயர்வினால் இவரது இலக்கியச் சேகரிப்புகள் தவறிப்போய்விட்டாலும் அண்மையில் 'காம்பு ஒடிந்த மலர்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். இப்பிரதேச எழுத்தாளரான இவரின் இலக்கியப் பங்களிப்பு மேலும் தொடர வெள்ளிமலை ஆசிரியர் குழு வாழ்த்தி அட்டைப் படத்தில் இவரது படத்தினை வெளியிடுகின்றோம்.

– வெள்ளிமலை





# ஈழத்துக் கதகளி கலைஞர் வேல் ஆனந்தன்

உ. உமாமகேஸ்வரி
(B.F.A)

20 ஆம் நூற்றாண்டின் கலை வளர்ச்சியிலே ஈழத்தமிழருக்கென தனித்துவ ஆடலை உருவாக்க வேண்டும் என்ற பேரார்வத்துடனும், 1940களிலே 'குருகோபிநாத் அவர் குழுவினர் மூலம் இலங்கையில் வரவேற்பைப் பெற்ற கதகளி நாட்டியத்தை இலங்கை முழுவதும் பரவச் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்துடனும், அக்காலக் கலைவளர்ச்சியில் பெருந்திருப்புமுனையாக அமைந்து உழைத்தவர் கலைஞர் திரு.வேல் ஆனந்தன் அவர்கள். கடல்வளமும், பனைவளமும் கொண்ட யாழ்ப்பாணத்தின் முகப்புறத்தில் அமைந்துள்ளது. நெடுந்தீவு. இத்தீவில் வாழ்ந்து வந்த வேலாயுதம்பிள்ளைக்கும் - மீனாட்சியம்மாளுக்கும் இல்லறப் பேற்றின் பயனாக 1941 இல் பிறந்தார். வேல் - ஆனந்தன். இவரது இயற் பெயர் அருளானந்தம்பிள்ளை. பின்னாளில் இவரது பாடசாலை அதிபரினால் தந்தையாரின் பெயருடன் இணைத்து சுருக்கி வேல் - ஆன்ந்தன் என்று அழைக்கப்பட்டார். அதுவே இவருக்கு நிலையான பெயராகியது. இவர் தனது ஆரம்பநாட்டியப் பயிற்சியைப் பாடசாலைக் காலத்தில் 1951, 52 ல் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலே நட்டுவனார், ஏரம்பு சுப்பையாவிடம் பயின்றார். நாட்டியப் பயிற்சிகளின் போது, இவர் ஏனைய

மாணவர்களிடையே தனித்து சிறப்பாக நிற்பதை குருநாதர் உணர்ந்து கொண்டார். அதற்கேற்ப அவரைச் செம்மைப்படுத்தி வளர்த்தார்.

பாடசாலைக் காலத்திலே பல நாட்டிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு தனது சிறப்பான ஆற்றுகைகளை வெளிப்படுத்தினார். பாடசாலைக் கலைவிழாக்களிலும் மாவட்ட மட்டம், மற்றும் தேசிய மட்ட தமிழ்த்தின விழாக்களிலும் கலந்து சிறப்பான தனது ஆற்றலை வெளிப்டுத்தினார். 1952 லே இலங்கைக்கு வந்திருந்த 2ம் எலிசபெத் மகாராணியாருக்கு பொலனறுவையிலே அளிக்கப்பட்ட விருந்துபசாரத்திலே மேடையேற்றப்பட்ட அறுவடை நடனத்திலே இவரும் பங்கேற்று தனது சிறப்பான நடனத்திறனை வெளிப்படுத்தியிருந்தார். அதுபோல சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக இருந்த காலத்தில், அவர் நெடுந்தீவிற்கு வருகை தந்திருந்த போது அவர் முன்னிலையில் மேடையேற்றப்பட்ட 'பாமாவிஜயம்' என்னும் நாட்டிய நாடகத்தில் நாரதர் வேடத்தில் பங்கேற்றுச் சிறந்த நடிகராக விளங்கினார். இந்நாட்டிய நாடகம் பல மேடைகளைக் கண்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

நடனக்கலையில் குறிப்பாக கதகளி நாட்டியத்தில் ஏற்பட்ட தனிப்பட்ட ஈடுபாடு காரணமாக தனது 19 வது வயதில் இந்தியா சென்றார். அங்கு புதுடில்லியில் 1959 தொடக்கம் 1962 வரை கேரள மாநில அரசின் கலாகேந்திராவில் குருகோபிநாத் அவர்களிடம் கதகளியினைக் கற்றார். பின்னர் தொடர்ந்து 1962 தொடக்கம் 1966 வரை கேரளா விஸ்வகலாகேந்திராவில் தொடர்ந்து கதகளியினைக் கற்றார். 6½ வருடங்களுக்கு மேலாகக் கதகளியினைத் தொடர்ந்து கற்றதுடன், 1964 ல் கதகளியில் (Diploma) டிப்ளோமா பட்டமும் பெற்றார். பரதநாட்டியத்தில் ஏற்பட்ட ஆசை காரணமாக தஞ்சை நால்வரின் வழிவந்த சுப்பராஜப்பிள்ளை நட்டுவனாரிடம் 2 வருடங்கள் பரதம் கற்றார். எனினும் இவருக்குப் பரதத்தினை விடக் கதகளியிலேயே அதிக நாட்டம் ஏற்பட்டது. கதகளியின் உள்ளார்த்தம் மிகவும் சிறப்பானது. பாவம் மிகவும் துல்லியமானது. முகத்தின் நுட்பமான அசைவுப் பிரயோகங்களை உடையது. மிகவும் அற்புதமான கதகளியின் செய்கைப் பிரயோகங்கள் இவரை கதகளியின் பக்கம் ஈர்த்துக் கொண்டது. கேரள கலாகேந்திராவில் கற்றபோது தயாரிக்கப்பட்ட ராம்லீலா நாட்டிய நாடகத்தில் 'இந்திரஜித்தின்' பாத்திரமேற்று இவர் நடித்திருந்தார். இது 145 தடவைக்கு மேல் மேடையேற்றப்பட்டுப் புகழ்பெற்றது. 1971 ல் புதுடில்லியிலே இடம்பெற்ற அனைத்துலகக்



கலைநிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார். அத்துடன் 1972 / 73 ல் கேரளத்தில் அகில இந்திய நாட்டிய நிகழ்வில் தனது நாட்டிய நிகழ்ச்சியை வழங்கியிருந்தார். அன்று அனைத்துலக மக்கள் அரங்க நிறுவனத்தினர் International Peoples theater Associats of India) இவரைச் சர்வதேசக் கலைஞராக அங்கீகரித்தனர். இது இவரது 32 வது வயதில் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. பனிக்பரத, பிரேம் குமார், சித்திரசேன போன்ற பிரபல நாட்டியக் கலைஞர்களுடன் நடனமாடியுள்ளார். கொச்சின் - கலாநிலையப் பணிப்பாளர் ராதாகிருஷ்ண மேனன், புதுடில்லி பாரதிய கலாகேந்திர கீழைத்தேச நாட்டிய நாடகத்துறைப் பொறுப்பாளர் சேகரன் பணிக்கர், அமெரிக்க நடனப்பள்ளி நேபாளியான பாலிதார் மோத்தீ மற்றும் உமாசர்மா போன்றோர் இவருடன் நாட்டியம் கற்ற சக மாணவர்கள் ஆவார்கள்.

## அரசபணியும் – கலைப்பணியின் ஆரம்பமும்

தன் தனிப்பட்ட ஆர்வம் காரணமாக கலைப்பணியினைப் பல பரிமாணங்களில் விரித்துச் சென்ற இவர் தன் வாழ்க்கைத் தொழிலான அரச பணியையும் செம்மையாகச் செய்து வந்தார். 1970 ல் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நடன விரிவுரையாளராகக் கடமையாற்றியதுடன், தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் விரிவுரையாற்றினார். இலங்கை சங்கீத சங்க அங்கத்தவராகவும் கடமையாற்றினார். இலங்கை கலாசார அமைச்சின் தமிழ் நடனப்பகுதி தலைவராக 1975 லிருந்து பதவி வகித்து வந்தார். அத்துடன் விடுமுறைக் காலங்களில், பளை, கிளிநொச்சி, வவுனிக்குளம் போன்ற இடங்களிலும் கலைத்துறை சார்ந்த பணிகளை மேற்கொண்டார். 1966 ல் நல்லூர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் நடன வகுப்புக்களை நடத்தியதுடன் 1969 ல் திருநெல்வேலியில் தனது சொந்த நாட்டியப்பள்ளியான 'கலைக்கோவிலை' நிறுவி கலைப்பணியை சிறப்புறத் தொடர்ந்தார். இவரது ஆரம்பகால மாணவிகளாக விளங்கி இன்றும் சிறப்பாகக் கலைத்துறையில் இருப்பவர்கள் என பத்மினி நடராஜா, நளாஜினி இராசதுரை, தேவமனோகரி இரத்தினசிங்கம், நகுலமாலா நவரத்தினம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

1982 ல் நாட்டிய நிகழ்வினை மேடையேற்றும் பொருட்டு ஐரோப்பிய நாட்டிற்குச் சென்ற முதல் ஈழத்தவர் என்ற பெருமை இக் கலைஞரையே சாரும். இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற பல இடங்களில்

இவரும், இவரது நாட்டியக் குழுவினரும் ஆடல் நிகழ்ச்சிகளை நிகழ்த்தியிருந்தனர். லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் ஸ்கொட் நிறுவனத்தினரின் அழைப்பின் பேரில் இவரது நடனக் குழுவினர் சிறந்த நாட்டிய நிகழ்ச்சியை வழங்கிப் பாராட்டைப் பெற்றார். இதில் பத்மினி, மதிவதனி, நகுலமாலா, கமலா போன்ற இவரது மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். 1984இல் மீண்டும் லண்டன் நகருக்கும், பிரான்ஸ் தலைநகர் பரிஸிற்கும் நாட்டிய நிகழ்வின் பொருட்டு சென்று வந்தார்.

## கதகளியும் – ஆனந்தனும்

பரத நாட்டியத்தைக் காட்டிலும் கதகளியில் மிகவும் நாட்டம் கொண்டவர் என்பதை மேலே பார்த்தோம். ஈழத்திலே தனது கதகளி ஆற்றுகைகளைச் செய்யும் போது மலையாள மொழியிலே உள்ள உருப்படிகளைத் தமிழில் மொழி மாற்றம் செய்ததன் பின்னரே மேடையேற்றுவார். 1980 களில் கதளியினை நாட்டிய நாடக வடிவிலிருந்து தனிநபர் ஆடலாகவும், பல தமிழ் இசை வடிவங்களாகவும் மாற்றம் செய்து மேடையேற்றினார். இதற்கான முதல் நிகழ்வாக செல்வி பத்மினி நடராஜாவின் கதகளி நடன அரங்கேற்றத்தினைக் குறிப்பிடலாம். இரண்டு மணி நேர தனிநபர் ஆடல் நிகழ்வாக இது இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக 1992 ம் ஆண்டு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கலைமணி வின்சென்ற் கதகளியில் தனிநபர் ஆடலை மேற்கொண்டார். 1993 ல் அஜித் பிலிப்ஸ் மட்டக்களப்பு நாட்டார் இசை வடிவில் 'நாததில்லானா' என்னும் உருப்படியை கதகளிப்பின்னணியாக வைத்து கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் அரங்கேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது பல நாட்டிய உருப்படிகளில் முழுமையான பரதத்தையோ கதகளியினையோ காண முடிவதில்லை இவையிரண்டும் இணைந்தோ, இணையாததோ போன்ற ஈழத்தமிழரின் கிராமிய நடனங்களினூடாக எழுந்த ஒரு புதிய பாணியைக் கையாண்டிருப்பதைக் காணலாம். அதற்குரிய காரணமாக அவர் கூறுவது நாம் இந்தியாவின் சொத்தான பரதநாட்டியத்தையே எமது சாஸ்திரீய நடனமாக நினைக்கிறோம். மேலை நாடுகளுக்குச் செல்லும் போது அவர்கள் எங்களிடம் கேட்கிறார்கள் நீங்கள் இந்திய நாட்டியத்தைத்தானே ஆடுகிறீர்கள் உங்களுக் கென்று சாஸ்திரீய நடனம் இல்லையா? என்று, சிங்கள இனத்தவர்க்கு கண்டிய நடனம் இருக்கிறது. ஆனால் ஈழத்தமிழருக்கென



தனியான சாஸ்திரீய நடனம் எதுவும் இல்லை. எனவே இவ்வாறான ஒரு தனிப்பாணியை உருவாக்க வேண்டும் என்ற எனது ஆர்வமே இவ்வாறான மாற்றங்களுக்குக் காரணம் என்றார். மேற்கூறிய கருத்தை பல இடங்களில் இவர் தெரிவித்திருக்கின்றார்.

1981 / 82 ல் வெளியாகிய நாதவாஹினி சஞ்சிகையிலும் இவ்விடயம் தொடர்பான இவரது கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் எமக்கென்று தனிப்பாணியை உருவாக்குவதற்காக அவர் பட்ட பாடுகளும், எடுத்த முயற்சிகளும், உழைத்த உழைப்புகளும், தங்களை கலை மேதாவிகளாக எண்ணிக் கொள்ளும் மேதாவிகள் பலரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, திட்டமிட்டு மூடி மறைக்கப்பட்டது. அத்துடன் இவர் போகும் இடமெல்லாம் ஒரு தர்க்க வாதியாகவும், சண்டைக்காரனாகவும் வர்ணம் பூசப்பட்டது. இவரது முயற்சிகளுக்கு அன்று செவிசாய்த்து, கை கொடுத்திருப்போமானால் எமக்கென்று ஒரு ஆடல் உருவாகியிருக்கும். எமது சமூகத்தின் அறிவும், தேடலும் மேதாவிகளாகத் தம்மை நினைத்துக் கொள்பவர்களால் காலுக்கு கீழே போட்டு நசுக்கப்படுவது இன்றல்ல அன்றே தொடங்கி விட்டது.

இத்தகைய இவரது புதிய முயற்சிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக 1994ல் முழங்கும் 'முழங்கும் முரசு' என்னும் நாட்டிய நிகழ்வைக் கூறலாம். இதில் ஒரு பகுதி நாட்டுக்கூத்தாகவும், மறுபகுதி கதகளியாகவும் ஒரே மேடையில், ஒரே இசையில் அமைத்திருந்தார். இவரது இந்த புதிய முயற்சிகளை கலாநிதி கபிலா வாத்ஸாயன், இராதாக்கிருஸ்ண மேனன் போன்றோர் ஏற்றுக் கொண்டனர் கதகளி, பரதநாட்டியம் மற்றும் புதிய முயற்சிகளில் பாடசாலை, ஆலயங்கள், சமூக கலாச்சார மேடைகள் என 850 இற்கு மேற்பட்ட மேடைகளைக் கண்ட தலைசிறந்த கலைஞரிவர். கதகளி – இலங்கையில் திரு.வேல் – ஆனந்தனால் மிகவும் பிரபலமாக இருந்த காலத்திலே யாழ். இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் கதகளி ஓர் பாடமாக இணைக்கப்பட்டிருந்தது. 1976ல் வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகளிலும் கதகளி ஓர் பாடமாக இடம் பெற்று வந்தது. நுண்கலைக் கழகத்திலிருந்தும், வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் சித்தி பெற்று பட்டத்துடன் 20 இற்கு மேற்பட்ட மாணவர்கள் வெளியேறியிருந்தனர். எனினும் பல்கலைக் கழக நுண்கலைப்பீடத்தில் திடீரென கதகளிப் பாடத்திட்டம் நிறுத்தப்பட்டமை இவரை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. ஆனால் நீண்ட

கால இடைவெளியின் பின்னர் 2009இல் யாழ். பல்கலைக்கழக நடனத்துறையில் கதகளி ஒரு பகுதிப்பாடமாக மீண்டும் கொண்டுவரப்பட்டது. அவரது வேதனை மற்றும் பிரார்த்தனையின் பலன் என்றே கூற வேண்டும். 1991ல் வெளியிடப்பட்ட வட இலங்கை சங்கீத சபையின் வைரவிழா மலரில் ஈழத்தில் கதகளி என்ற கட்டுரையை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

19.11.1975ல் சுச்சுப்புடி, கதகளி இணைந்த நடனங்கள் பற்றிய தொகுப்பும் ஆடல் நிகழ்வும் கலைஞரால் நிகழ்த்தப் பட்டன. குமாரிரங்க விவேகானந்தா இந்த நாட்டிய நிகழ்வினை மேற்கொண்டார். 1976ல் மலர் வெளியிட்டதாகவும் அறியப்படுகிறது. 24.03.1990ல் தனது நடன ஆற்றுகையின் வெள்ளி விழாவினைக் கொண்டாடினார். அத்துடன் 870வது நாட்டிய நிகழ்வை மணிவிழாவாக 18.11.2001ல் திருகோணமலையில் நடாத்தியிருந்தார். இந் நிகழ்வின் போது வேல் ஆனந்தன் மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது. இதில் பெரும்பாலான கட்டுரைகள் ஆனந்தனும் கதகளியும் பற்றியதாகவே அமைந்திருப்பதைக் காணலாம் இவர் கதகளி ஒப்பனைக்கென்று தனியான கலைஞர் ஒருவரை வைத்திருந்ததாக அறியமுடிகிறது.

## ஆனந்தனின் நாட்டிய நாடகங்கள்

பரதநாட்டியம் மற்றும் கதகளிப் பாணியில் நாட்டிய நாடகங்கள் பல இவரால் நாட்டியமைப்புச் செய்யப்பட்டு மேடை யேற்றப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது. பஸ்மாசுர மோஹினி,பாமா விஜயம், சீதாபகூரணம், ஆலயமணி, ஆதிமனிதன், அருளும் இருளும், தேரோட்டி மகன், என்னதான் முடிவு, வெண்புறா, கணையாளி, வற்றாப்பளையாள், போன்றவற்றை கூறலாம். இவற்றில் பஸ்மாசுரன், 1977 என்னதான் முடிவு, ஆலயமணி, வெண்புறா, போன்றவை சமூகம் சார்ந்த விடயங்களைக் கருத்தாகக் கொண்டு எழுதப்பட்டது. ஆலயமணி நாட்டிய நாடகத்தில் முன்னைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிக ஆழமாக வேருன்றி நின்ற சாதிக் கொடுமையை மையமாக வைத்து உருவாக்கப்பட்டிருந்தது. அது போல 1977 இனக்கலவரத்தைக் கருவாகவும் கொண்டது. என்னதான் முடிவு - வடக்கு - கிழக்கு தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சியினைக் கருவாகக் கொண்டும் உருவாக்கப்பட்டது. ஏனைய புராண இதிகாசங்களையும், பைபிள் கதைகளையும் மையமாகக் கொண்டது. நாட்டிய நாடகம் என்பது தனிக்கலை அதனை இலகுவில் எல்லோரும் கைக்கொள்ள முடியாது. இதில் முறையான தெளிவு வேண்டும். வார்த்தைப் பிரயோகங்கள்,



ரஸவேறுபாட்டு நுணுக்கங்கள், இராகநுட்பம் இவற்றில் எழுத்தாளர் மட்டுமன்றி நாட்டிய ஆசிரியரும் அறிந்திருக்கவேண்டும் என்பது அவசியமாகும். பாத்திரத் தெரிவு, காட்சியமைப்பு, கதைப்பின்னனி என்பவற்றில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்ற கொள்கையில் திடமானவர்கள். அதுமட்டுமன்றி "ஒருநாட்டிய நாடகம் ஆடும் போது அங்கு ஆடலைக் காட்டிலும் அந்நிகழ்வின் மூலம் என்ன விடயத்தை சமூகத்திற்கு சொல்ல முற்படுகிறோம் என்பதில் முக்கிய கவனம் செலுத்து" என்பது குருவின் கூற்றில் அசையாத பற்றுடையவர் அதன்படியே தன் ஆற்றுகைளை வெளிப்படுத்தியவர்.


இவரது கலைச் சேவைக்கு கிடைத்த பாராட்டுக்கள் பல அவற்றுள் 1993ல் இலங்கை கலாசார அமைச்சு சாஹித்திய விழாவில் வைத்து 'கலைச் செம்மல்' விருதினை வழங்கிருந்தது. 1995ல் இலங்கை அரசின் கலாபூசணம் விருதும் வழங்கப்பட்டது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை "தாண்டவச் செல்வன்" என்ற விருதும், காங்கேசன்துறை தமிழ்தாய் மன்றம் "நவரச திலகம்" என்ற பட்டத்தையும், வன்னி அகில இலங்கை காந்தீயத்தின் "நிருத்திய கேசரி" என்ற பட்டத்தையும் அகில இலங்கை நாவலர் மகாசபையினர் "நாட்டியமாமணி" என்ற பட்டத்தையும் தமிழ்த்தந்தை என்.ஜே.வி.செல்வநாயகம் இவரைப் பாராட்டி 'கலைஞர்' என்ற பட்டத்தையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1986 ஜீலையில் வெளிவந்த "மல்லிகை" சஞ்சிகையில் கலைஞரவர்களின் படம் அட்டைப்படத்துடன் அவற்றைப் பற்றிய சிறுகட்டுரையும் உள்ளே இடம் பெற்றுள்ளது. இவரது கலைநிகழ்வுகளைப் பாராட்டி சி.குருநாதன் 18.11.2001 தினக்குரலிலும், மாலி என்பவர் 15-30 செப். 2001 லண்டன் அஞ்சல் இதழிலும் சிறப்புக்கட்டுரைகளை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தனது கலை மீது கொண்ட பேரார்வம், பக்தியின் காரணமாக 20ல் நூற்றாண்டின் இலங்கை கலை வளர்ச்சியில் குறிப்பாக கதகளி நாட்டியத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வேல் ஆனந்தவர்களின் கலைப்பயணத்தின் ஒரு சிறு பகுதியே இக்கட்டுரை எனலாம். அவரது சிறப்பார்ந்த பணிகள் இன்னும் நீண்ட ஆய்வுக்குரியவை. ■

# நனவிடை தோய்தல்

ச.திருச்செல்வம்
இராமர் வளவு சுன்னாகம்

சுன்னாகம் நான் வதியும் கிராமமாகும். சுன்னாகத்தின் எல்லைகள் வடக்கே மல்லாகமும்,தெற்கே இணுவிலும், கிழக்கே புன்னாலைக்கட்டுவனும் மேற்கே கந்தரோடையையும் ஆகும். காவற் கோயில்களாக வடக்கே ஐயனார் ஆலயமும் தெற்கே உடுவில் அம்மன் ஆலயமும், கிழக்கே பூதராயர் ஆலயமும், கதிரை மலைச்சிவன் ஆலயமும் மயிலணிக் கந்தசாமி ஆலயமும் அமைந்துள்ளன. மருதனார்மடத்திலிருந்து சுன்னாகம் வரும் றோட்டில் பிரயாணம் செய்யும் போதும், கிழக்கே புன்னாலைக் கட்டுவனிலிருந்து சுன்னாகம் சந்திநோக்கி வரும் போதும், சுன்னாகத்தின் நகர அழகு சிலிர்க்கவைக்கும்.



இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் சுன்னாகத்தை நோக்கினால் பிரதான வீதிகளில் இருமருங்கிலும் மரங்கள் நிழலைச் சொரிந்த வண்ணமிருந்தன. பிரதான வீதிகளில் மாட்டுவண்டிகளும், குதிரை வண்டிகளும் ஓடிக்கொண்டி ருந்தன. கார்கள் சிலவும், லொறிகள் சிலவும் ஓடிக்கொண்டி ருந்தன. சைக்கிள்கள் குறை வாகவே இருந்தன. அனேக மானோர் சைக்கிள் கடைகளில் வாட கைக்குத்தான் சயிக்கிளை எடுத்துத் தாம் போய் வரும் இடங் களுக்குச் செல்வார்கள். நாலைந்து வாடகைக்கு சைக்கிள் விடும் கடைகள் இருந்தன. ஒவ்வொரு கடைகளிலும் பத்து முதல் இருபது சைக்கிள்கள் வைத்திருந்தார்கள். ஒரு மணித் தியாலயம் பாவனைக்குப் பதினைந்து சதம் வசூலிப்பார்கள். ஒருவர் வாடகைச் சைக்கிள்க் கடையில் வாடகைக்குச் சைக்கிளை எடுக்கும்போது, நேரத்தையும் சைக்கிள் எடுப்பவரின் பெயரையும் ஒரு கொப்பியில் பதிவார்கள். பின் சைக்கிள் தேவையானவருக்குச் சைக்கிளைக் கொடுப்பார்கள். சைக்கிளை வாடகைக்கு எடுப்பர் தான் போக வேண்டிய இடத்துக்குச் சென்று தன் வேலையை முடித்துக் கொண்டு சைக்கிள்க்கடைக்கு சைக்கிளைக் கொண்டு வரும் போது சைக்கிள்க் கடைச் சொந்தக்காரன் நேரத்தைப் பார்த்து எவ்வளவு நேரம் சைக்கிள் பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதனைப் பார்த்து, ஒரு மணித்தியாலம் பதினைந்து சதம் வீதம் பாவிக்கப்பட்ட நேரத்துக்கு காசு அறவிடுவார். சைக்கிளில் பழுது ஏதும் ஏற்பட்டால் அதற்குத்தனியாகக் காசு அறவிடுவார்கள். எல்லாச் சைக்கிள் கடைகளிலும் பழைய காலத்து றோமன் எண் எழுத்துக்களால் எழுதப்பட்ட பெண்டுலம் ஆடும் மணிக்கூடு சரியான நேரத்தைக் காட்டிக் கொண்டிருக்கும். நேரம் பார்ப்பவர்கள் இந்தச் சைக்கிள் கடைகளில் தான் நேரத்தைப் பார்ப்பார்கள். சைக்கிள் கடை நடத்துபவர்கள் சைக்கிள் பழுது பார்ப்பதிலும்,



திருத்துவதிலும் விற்பனர்களாக இருப்பார்கள். தனிப்பட்டவர்களின் சைக்கிளையும் கழட்டிப்பூட்டித் திருத்தம் செய்வதற்கும், தனிப்பட்டவர்களின் சைக்கிள் ரயர்களின் முள்ளுக் குத்திக் காற்றும் போய்விட்டால் ரியூப்பை ஒட்டிக் கொடுத்து காசு அறவிடுவார்கள்.

இந்தச் சைக்கிள் கடைச் சொந்தக்காரர்கள் மிகவும் கண்டிப்பானவர்களாக இருந்தார்கள். சிலர் சண்டியர்களாகவும் இருந்தார்கள். ஒரு போதும் சைக்கிளை எடுத்துக் கொண்டு போய் களவாக விற்ற செய்திகள் ஒரு போதும் நானறிய நடை பெறவில்லை. ஒரு சிலர் தான் சொந்தமாகச் சைக்கிள் வைத்திருந்தார்கள். அதுவும் முப்பது வயதுக்குக்குறைந்தவர்கள் தான் வைத்திருந்தார்கள். நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கும் அந்தக் காலத்தில் சைக்கிள் ஓட்டத் தெரியாது. சைக்கிள் ஓடுவது கடைப்பிளிகளின் பழக்கம் என்று ஒரு வழக்கம் அந்தக் காலத்தில் இருந்தது. நல்லபிள்ளைகள் சைக்கிள் ஓடிப்பழக மாட்டார்கள். எங்கு போவதானாலும் நடையிலேயே செல்வார்கள். யாழ்ப்பாணத்துக்கும், வட்டுக்கோட்டைக்கும் நடந்து போய் பள்ளிகளில் படித்தார்கள். அத்துடன் தேவைக்கேற்றபடி நடந்தே போய்க் காரியம் பார்த்த தேவைக் கேற்ற படி நடந்தே போய்க் காரியம் பார்த்தார்கள். நிலச்சுவாந்தர்கள் வில்லு வண்டிகளும், குதிரை வண்டிகளும் வைத்திருந்தார்கள். ஒரு சிலர் சொந்தமாக கார் வைத்திருந்தார்கள். கார்வைத்திருப்பவர்கள் அனேகர் வாடகைக்கு கார் விடுபவர்களாகவே இருந்தார்கள். ஒருசில அரசாங்க வைத்தியர்களும், பெரிய அரசாங்க உத்தியோகத்தர்களும் தான் சொந்தப் பாவனைக்கு கார் வைத்திருந்தார்கள்.

நான் சிறு பையனாக இருந்த காலத்தில், எமது அயல் வீட்டு வைத்தியர் முத்துக்கிருஷ்ணர் அவர்களின் வீட்டில் அழகான வில்லு வண்டில் ஒன்று இருந்தது. வெல்வெட் கவரிங் உடன் இருக்கைகளும் பித்தளை வெள்ளியில் பூவேலை செய்த அணிகலங்களும் வண்டியை மிகவும் அழகுபடுத்தியிருந்தன. வண்டியில் ஒரு வெள்ளிச் செம்பு போல தோற்றமுடைய மணிபொருத்தி இருந்தது. அதன் மேலுள்ள நீண்ட பொத்தானை அழுத்தினால் காதுக்கினிய ரம்மியமான மணியோசை வெளிப்படும். பக்கத்து வீட்டில் புறக்டர் கனகரத்தினம் அவர்களிடம் அழகான பெரிய குதிரை வண்டியிருந்தது. கறுப்பு நிறத்தில் இருபக்கமும் அழகான பித்தளை மின்னும் விளக்குகளும், சில்லுகள் பித்தளைப் பூணும் குதிரை கட்டும் வண்டியின் முகப்பில் பித்தளை பூண்களும் மின்னிக் கொண்டிருக்கும். சாணர் என்பவர் தான் குதிரை வண்டிச் சாரதி கட்டையான தோற்றமுடைய அவர் சாய வேட்டியும், சால்வையும், மண்ணிற், சேட்டும் அணிந்திருப்பார். நன்றாக சந்தணம் பொட்டும் குங்குமம் முகத்தில் துலங்கும். கையில் குதிரைச் சவுக்கு எப்போதும் இருக்கும். அவர் அந்தக் குதிரையைச் செல்லமாகத் தட்டி கொடுக்கும் போது பார்க்க ஆசையாக இருக்கும். மேலும் அந்தக் குதிரைக்கு விதம், விதமான மணிமாலைகளை வேண்டிக் குதிரையை அலங்கரித்து இருப்பார். குதிரைக்கு எண்ணெய் போட்டு மசாஜ் செய்யும் அழகும், குதிரை அதனை ஏற்று வளைவதும் வாயைத் திறந்து பல்லைக்காட்டுவதும் எம்போன்ற சிறியோர்க்கும் பார்க்க மிக விந்தையாக இருக்கும்.

(இன்னும் வரும்)

சித்திரம்: S. டிசானா

## தெளிவுறு நல்லறிவுச் சுடர் ஏற்றுக.

பள்ளி செல்லும் பிள்ளைகள் - நாம்
படிப்பினிலே சிறந்து விளங்கிடவே
பாங்குடைய நூல்கள் கற்றே
பாரினிலே சிறந்திடுவோமே

நல்ல நல்ல நூல்களெல்லாம்
நமக்கு சிறந்த நண்பரே ஆவார்
நன்றே அவர் துணையினை பெற்று
நலமுடனே உலகில் உயர்வோமே

சிறந்த நல்ல நூலகம் தேடி
சிந்தனைக்கு உரமென அறிவை
பெற்றிடவே பயன்படுத்துவோமாகில்
கற்றவரும் காமுறவே செய்வர்

வித்தகத்தின் விளைநிலம் நூலாம்
நித்தமிதை படித்திடுவோமாகில்
இத்தரையின் உயர்வுகள் காண்போம்
இனிதான மானுடன் ஆவோம்.

**ச. சக்தி தர்ஷினி**
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி



## நற்பிரஜைகளை உருவாக்குவதில் நூலகங்களின் வகிபாகம்

செ. சங்கீர்த்தனா
யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற வாக்குக்கிணங்க மனிதன் நல்ல பயனுள்ள நூல்களை வாசிப்பதால் தனது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும் நல்ல நூல்களே நமது சிறந்த நண்பர்களாகும். நமது நண்பர்கள் நம்மை வெறுத்து ஒதுக்கும் போது தம்முடனே என்றும் தொடர்ந்து இருப்பவை நூல்களே. இப்படி எம்மை உலகிலே உயரவைப்பவை நூல்களே .இவ்வாறு நற்பிரஜைகளை உருவாக்குவதில் நூல்கள் களஞ்சியப்படுத்தி பாதுகாக்கப்படும் நூல் நிலையங்களின் முக்கியம் அளவிடமுடியாத ஒன்றாகும்.

இன்றைய விஞ்ஞான உலகிலே பாடசாலை மாணவர்கள் கூட நூலகங்களுக்குச் சென்று தமது அறிவை விருத்தி செய்தல் என்பது மிகவும் குன்றிவிட்டது. ஏனெனில் மாணவர்கள் தொலைக்காட்சி பார்த்தலிலே தமது நேரத்தைச் செலவிடுகின்றனர் இதனால் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களும் சிலர் உள்ளனர். இப்படி நேரத்தை விரயம் செய்யாது நாம் எமது ஒவ்வொரு நிமிடத்தையும் நூல்களை வாசிப்பதில் செலவிட வேண்டும். "நூல் பல கல் என்ற ஔவையாரின் வாக்குக்கிணங்க நாம் நூல்கள் பலவற்றைக் கற்று எமது அறிவை விருத்தி செய்யமுடியும். "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" அதாவது நாம் கற்ற கல்வியியானது கைமண்ணளவு ஆனால் கற்க வேண்டிய விடயங்கள் பல உள்ளன. உலகினை போல பரந்த எல்லையற்ற கல்வியினை பெறுவதற்கு நூலகத்தை நாடுவது மிகச்சிறந்ததாகும். நாம் கற்கும் நூல்களில் பல பிரிவு காணப்பட்டாலும் அவற்றில் நமக்கு பயன் தரும் விடயங்களையே நாம் கற்க வேண்டும். அதாவது அன்னப்பறவையானது நீரை அகற்றி பாலை மட்டும் அருந்துவது போல நாமும் தேவையற்ற விடயங்களை விடுத்து நமது அறிவை விருத்தி செய்யக் கூடிய நூல்களையே கற்க வேண்டும்.

"ஒரு நூல் நிலையானது திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படும்" ஏனெனில் இன்றைய இளைஞர்களே நாளைய சமூகத்தின் தலைவர்கள் நூல்நிலையமானது திறக்கப்படுமாயின் மாணவர்கள் அங்கு சென்று பயனுள்ள நூல்களைக் கற்பார்கள். அவ்வாறு பயனுள்ள நூலகளைக் கற்பதால் அவர்களிடம் உள்ள தீய பழக்கங்கள் இல்லாது நீங்கி

நல்ல உலகம் மதிக்கும் மாணவர்களாக மாறுவார்கள். அவ்வாறு ஒவ்வொரு மாணவனும் மாறுமிடத்து உலகிலே குற்றச் செயல்கள் குறைந்தது சிறைச்சாலைகள் மூட வேண்டிய தேவை ஏற்படும் இவ்வாறு குற்றவாளிகளின் மனதை மாற்றும் அளவுக்கு நூல்களும் நூலகங்களும் மகிமை வாய்ந்தவை என்றே கூறவேண்டும்.

"கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்பது போல நாமும் அறிவியல் சார்ந்த நூல்களை கற்று உயர்வடைய நூலகங்கள் பல்வேறு பங்களிப்பை செய்கின்றன. நூலகத்திற்கு செல்வதன் மூலம் எமது மனக்கவலைகள் நீங்கி மன அமைதியுடன் நூல்களை கற்க முடியும். நூலகத்திற்கு சென்று நூல்களை வாசிக்க வயதெல்லையோ, சாதி, மத, பேதமோ இல்லை சிறுவர்களும், முதியவர்களும் ஏன் பாமரர் ஆயினும் சென்று நூல்களை வாசிக்க முடியும் அமைதியான சூழலிலே அமைந்திருக்கும் நூலகத்திற்கு சென்று நாம் எத்துறை சார்ந்த நூல்களாயினும் கற்க முடியும்.

நூலகத்திற்கு சென்று மாணவர்கள் கற்க வேண்டும் என்ற நோக்கிலே பாடசாலைகள் மற்றும் நாம் வாழும் பிரதேசத்திலே நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. நூலகங்களின் முக்கிய நோக்கு மக்களினுடைய வாசிப்புத் திறனை விருத்தி செய்தலாகும். ஒவ்வொரு பாடசாலைகளிலும் நூலகங்கள் திறக்கப்படுவதால் மாணவர்கள் தமக்கு தேவையான விடயங்களை நூலகத்திற்கு சென்று தேடிக்கற்க முடியும்.

*"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்*
*மன்னனை விட கற்றோன் சிறப்புடையவன்"*

என்பது ஔவையாரின் கருத்தாகும். அதாவது மன்னனையும் நன்கு கல்வி கற்றவனையும் நோக்குமிடத்து மன்னனை விட கல்வி கற்றவன் சிறப்புடையவனாக கருதப்படுவான். நாட்டின் தலைவனுக்கு தன்தேசத்தில் மட்டுமே சிறப்பு உண்டு. ஆனால் கல்வி கற்றவனுக்கு எங்கு சென்றாலும் சிறப்புண்டு. ஒரு மரத்திற்கு வேர் பிரதான ஒன்றாக அமைவது போல மனிதன் ஒருவன் நற்பிரஜையாக உயர்வதற்கு நூல்களும், நூல் நிலையங்களும் அச்சாணியாக அமைகின்றன. "அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் அசையாது" என்பது போல எமது அறிவை விருத்தி செய்ய தேவயான நூல்களும், நூலகங்களும் இல்லாது போனால் எமது உலகமே அழிந்து போனதாக கருதமுடியும்.

*விலங்கொடு மக்களனையர் இலக்கு நூல்*
*கற்றாரோடு ஏனை யவர்"*

என்ற திருவள்ளுவ நாயனாரின் குறட்பா மூலம் கல்விகற்றவர்களே மனிதர்களாக கருதப்படுவர் என்பதை நாம் உணரமுடியும்.



**கல்வியற்றவர்களின் முகத்திலே இரு கண்கள் காணப்படும். ஆனால் கல்வியறிவில்லாதவர்களின் முகத்திலே காணப்படுபவை இரு புண்களாகும் எனவும் திருவள்ளுவர் கல்வியின் முக்கியத்தை உயர்த்திக் கூறுகையில் நாமும் கல்வி கற்று உயர வேண்டும் என்ற அவா ஒவ்வொரு மனிதரிடத்தும் உண்டானால் நூலகங்கள் பல உருவாகும். இவ்வாறு நூலகத்தின் வளர்ச்சி மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தில் தங்கியுள்ளது எனலாம். ஆனால் மாணவர்களின் உயர்வு நூலகத்திலே தங்கியுள்ளது.**

***"கற்கை நன்றே கற்கை நன்றே***
***பிச்சை புகினும் கற்கை நன்றே"***

**அதாவது நாம் எவ்வளவு துன்பப்பட்டாலும் கல்வி கற்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. நாம் வாழ்வில் உயர அவசியமான நூல்களின் பங்களிப்பு, நூல்நிலையங்களின் பங்களிப்பு மிகவும் பரந்த எல்லையற்ற ஒன்றாகவே இருக்கின்றது. பருப்பொருட்களாக இருக்கும் செல்வங்கள், கட்டடங்கள் நிலையற்றது. ஆனால் நுண்பொருளாக காணப்படும் கல்விச் செல்வம் என்றும் எம்முடனே இருக்கும். இப்படி நம் உயிருள்ள வரை எம்முடனே பின்னிப் பிணைந்திருந்து இருக்கும் கல்விச் செல்வத்தை பெற்று நற்பிரஜையாக உருவாக்குவதில் நூலகங்களின் வகிபாகத்திற்கு எல்லையே இல்லை. எனவே நாம் நூலகத்தினை பயனுடையதாக நினைத்து எமது நேரத்தை நூல்களை வாசிப்பதில் செலவிட்டு வாழ்வினின் உயர்வோமாக.**

**"நல்ல நூல்களே சிறந்த நண்பர்கள்"** ■

## அறிவுடைச் சமூகம்

முன்னொரு காலம் படிப்பென்பது ஒருசிலரின் சொத்து
பின்பொரு காலம் பதின்நான்கு வயதுவரை 'கல்வியெனும் முத்து
ஊருக்கு ஊர் எங்குமே உயர்திடு ஆலயங்கள்
அறிவுக்கு வழி காட்ட அமைந்தன நூலகங்கள்

அறிவுடைச் சமூகம் ஆதல் இன்று அனைவர்க்கும் கடனே
தெரிந்திதை பேணுவோர்க்கு தோன்றிடும் ஞானக் கடலே
நூல்களைப் போற்றியே கல்வியைக் கற்றிடுவோம்
வாழ்க்கை பாதையில் வழிகாட்டலைப் பெற்றிடுவோம்

பூரண மனிதனாய் புவிதனில் வாழ்ந்திட
சேரென நற்றுணை நாலும் நூலகமும்
யாரிதைப் போற்றுவரோ ஞாலத்தின் ஒளியாய்
பேரினைப் பெற்றிடுவார் பேறினைப் பெற்றிடுவார்.

K. கஜானி
இணுவில் இந்துக் கல்லூரி

# "உள்ளூராட்சியின் மாட்சி"

கொழும்பு தமிழ்ச் சங்கம்

அனலை
சௌந்தரராஜன்

நூலகம்

பிரதேச மேம்பாட்டைப் பேணிவரும் உள்ளூராட்சி
அறிவீரோ இதனாற்றல் ஆகாகா இதன்மாட்சி
தெருவீதி அமைப்புமுதல் தூயநீர் தருவழிகள்
சேவைகளை, வசதிகளைதந்திடுதல் இதன்பணியே; (01)

ஊர்மனைகள் கட்டிடங்கள் உறுவிதியை அனுசரித்து,
ஊடாடிக் காற்றோட உகந்ததாகக் கட்டிடவும்,
நீர் நிலைகள் மேன்மையுற்று நன்னிலையைப் பேணிடவும்
நலம்புரிந்தே தாய்சேய் நலவாழ்வு ஓங்கிடவும் (02)

நோயணுகா நிலை பேணி, நோய்பிணி சுகமளிக்க,
மூலிகை மருத்துவத்தை முறையாக அனுசரித்தே;
தூயசூழல் பேணிடவும், தொற்றுநோய் தொலைந்திடவும்
அந்திய காலத்து ஆறும் பூமியோடு; (03)

நூலக சேவைகள்; வாசிப்பு வாய்ப்புக்கள்;
சனசமூக நிலையங்கள், சந்தை பரிபாலனங்கள்;
பாலக வயதோர்க்கு பள்ளியொடு பூங்காக்கள்;
படிப்போடு விளையாட்டு பங்கேற்று இளைப்பாற (04)

திட்டமிட்டு பிரதேச வளஞ்சேர பலநூறு
பயன்பாட்டுச் சேவைபுரி ஊராட்சி முறையாலே
எட்டுமே நன்மைபல வழங்கிடுவோம் பங்கேற்பு;
மக்கள் ஆட்சி வெளிப்பாடு மன்றத்திலே உருவாகும் (05)

உள்ளூர்வளம் பேணி ஊரின் தேவை நிறைவாக்கு
உருவான ஊராட்சி ஒற்றுமையே இதன்நோக்கு;
உள்ளூராட்சி சேவைகளால் உருவாகும் மேம்பாடு
உவந்திந்தப் பணிகளை ஒத்துழைத்தே பண், பாடு. (06)







# பாடசாலை செல்லும் முதலாம் ஆண்டின், முதல் நாளில், முதலாம் பாடம், சேமிப்பைப் பற்றியதாகும்

## அன்பின் பெற்றோர்களே!

உங்களது அன்பு மகன் அல்லது செல்ல மகள் பாடசாலைக்குச் செல்லும் முதல் நாளைப்பற்றி என்னென்ன கனவு கண்டிருப்பீர்கள்? உங்கள் செல்ல பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பது உங்களது பிரார்த்தனையாகவும், எதிர்பார்ப்பாகவும் இருக்குமல்லவா? எனவே தான் அத்தகைய பாதுகாப்பொன்றை உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் கருதி, 2010ம் ஆண்டில் பாடசாலை செல்லும் **"முதலாம் நாளில், முதலாம் பாடம்"** பற்றி அறியத் தருகிறது மக்கள் வங்கி.

அன்பின் பெற்றோர்களே, நீங்கள் செய்யவேண்டியது என்னவெனில், உங்கள் பிள்ளை முதலாம் வகுப்பிற்குச் செல்லும் அதேதினம், பிள்ளையின் பெயரில் **"சிசு உதான"** கணக்கொன்றை ஆரம்பித்து சேமிப்பின் பெறுமதியைப் பற்றி கற்றுத்தரவேண்டியதாகும். **நீங்கள் வைப்புச் செய்யும் தொகையுடன் ரூ. 500 வரை உங்கள் பிள்ளையின் கணக்கில் மக்கள் வங்கி பரிசளிப்பதுடன் (31.03.2010 வரைக்கும்)** கல்வியினதும், சேமிப்பினதும் பெறுமதிக்கு மேலும் பெறுமதி சேர்ப்பதற்காகவேயாகும். **கணக்கின் தொகை ரூ. 1000ஆக விரைவில் அதிகரிக்கும் பட்சத்தில் பெறுமதிமிக்க பரிசுகளும் காத்திருக்கின்றன.** நீங்களும் அண்மையிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது மக்கள் வங்கியின் சேவை நிலையத்தில் அல்லது மக்கள் வங்கியின் **"சிசு உதான"** பாடசாலை அலகிற்குச் சென்று **"சிசு உதான"** கணக்கொன்றை ஆரம்பித்திடுங்கள்.

உங்கள் பிள்ளைக்கு பாடசாலை செல்லும் முதலாம் நாளில், **சேமிப்பைப் பற்றிய முதலாம் பாடத்தைக் கற்றுக் கொடுங்கள்.**

மக்கள் வங்கியின் "சிசு உதான" கணக்கினை ஆரம்பித்த பிள்ளைகள் எந்நாளும் வெற்றியாளர்களே!

2008 2009 2009

www.peoplesbank.lk

மக்கள் வங்கி